


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆகஸ்டு 5, 2010 புரட்சி 9 முழக்கம் 30 விலை: ரூ.2.50


## மதச்சார்பின்மைக்கு எதிராக செயல்படும் அரசு அலுவலகங்கள் காவல்துறையினரை எதிர்த்து நேரடி நடவடிக்கை

# அக். 2 இல் தீண்டாமை ஒழிப்புப் பிரிவை மூடும் போராட்டம்

## திருச்சிராப்பள்ளியில் கூடிய கழக தலைமைச் செயற்குழு தீர்மானம்




*பெரியார் திராவிடர் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 1.8.2010 அன்று காலை 10.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி ராஜா கார்டன் ஓட்டல் அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.*

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரை நிகழ்த்தினார். 2009 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி சேலத்தில் கடைசியாக செயற் குழு கூடியது. இடைப்பட்ட காலங்களில் கழகத் தின் பல்வேறு நிகழ்வுகளை சுட்டிக்காட்டியும், கழகத்தின் எதிர்கால செயல்திட்டங்கள், அணுகு முறைகள் பற்றியும் விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தனது உரையில் - கழகத்தின் எதிர்கால செயல் திட்டங்கள், கழகத் தோழர்களின் உற்சாகப் பணிகள், குடிஅரசு வழக்கில் கழகம் போட்ட எதிர் நீச்சல்களை விளக்கினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தனது உரையில் - சாதி தீண்டாமைக்கு எதிராக கழகம் திட்டமிட்டுள்ள காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்து மூடும் கிளர்ச்சிக்கு மேலும் விரிவாக பரப்புரை இயக்கங்கள் நடத்துதல் பற்றியும், தலைமைக் கழகத்துக்கு அலுவலகம் உருவாக்க வேண்டிய அவசியம் குறித்தும், தீண்டாமைக் கொடுமைகள் பற்றிய பட்டியல் தயாரிப்புக் குறித்தும் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் பங்கேற்கும் மாவட்ட கழகங்களின் கூட்டங்கள் நடத்துதல் பற்றியும், கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு சந்தா சேர்ப்பதில் தோழர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் குறித்தும், ‘குடிஅரசு’ தொகுப்புகளை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கினார்.

தொடர்ந்து மாவட்ட கழகங்களின் சார்பில் தோழர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். சேலம் மாவட்டக் கழக அமைப்பாளர் டைகர் பாலன், திண்டுக்கல் தாமரைக்கண்ணன் ஆகியோர் எழுத்துப்பூர்வமாக தயாரித்து வந்த கருத்துகளை முன் வைத்தனர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 95 தோழர்கள் பங்கேற்றனர். 2 மணிக்கு மதிய உணவுக்குப் பிறகு 3.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் மூத்த உறுப்பினரும், சட்ட எரிப்புப் போரில் சிறை சென்றவருமான இலால்குடி முத்து செழியன், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகள், பெரியார் காலத்தில் போர்க் குணத்தோடு நடைபோட்ட திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளைப் போல் இருப்பதை தாம் உணர்வதாகவும், இவ்வளவு இளைஞர்களை கருப்புச் சட்டையுடன் பார்க்கும் காட்சி, தனக்கு உற்சாகம் தருவதாகவும் கூறி, கடந்தகால லட்சியப் பயணங்களை பகிர்ந்துக் கொண்டார். பெரியார் நடத்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் லால்குடி பகுதியிலிருந்து மட்டும் 350 தோழர்கள் பங்கேற்றதையும், லால்குடி தோழர்களுக்கு மட்டும் ஓராண்டிலிருந்து இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதையும் நினைவுகூர்ந்த அவர், அப்படிப் போராட்டத்தில் பங்கேற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த தோழர்கள் பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளைக் கண்டு மிகவும் பாராட்டுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். தங்கள் பகுதியில் பெரியார் திராவிடர் கழகத்தில் இணைவதற்கு ஏராளமான தோழர்கள் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது உரை தோழர்களுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தது.

100 ‘குடிஅரசு’ தொகுப்புகளை விற்றுத் தர புதுவை கழக சார்பில் லோகு. அய்யப்பன் உறுதி யளித்தார். மற்ற மாவட்ட தோழர்களும் இதுபோல் உறுதி வழங்கினர். கூட்டத்தின் இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. தமிழ்நாட்டில் சாதி-தீண்டாமை பல்வேறு வடிவங்களில் கிராமங்களில் பின்பற்றப்பட்டு வருவதை வேடிக்கைப் பார்க்கும் தமிழகக் காவல்துறையின் மனித உரிமைப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தின் நோக்கங்களைத் தமிழகம் முழுவதும் பரவலாக கொண்டுச் செல்வது என்றும், தாழ்த்தப்பட்டோருக்கு ‘அரிஜன்’ என்று பெயர் சூட்டி அவர்கள் உரிமைக்கு எதுவும் செய்யாத காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதி தீண்டாமைக் கொடுமைகளை வேடிக்கைப் பார்க்கும் காவல் துறையின் மனித உரிமைப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தை நடத்துவது என இக்குழு முடிவு செய்கிறது.
2. தமிழ்நாட்டில் கருத்துரிமைக்கு எதிரான அடக்கு

(4 ஆம் பக்கம்)

## முதற்கட்ட மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள்

*கழக மாநில செயற்குழுவின் முடிவுக்கேற்ப, முதல் கட்டமாக மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளன. கழகத் தலைவர்,பொதுச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டங்களில் பங்கேற்பார்கள்.*

| | | |
|---|---|---|
| 14.8.2010 | காலை 10.00 - கரூர் | மாலை 6.00 - திருச்சி |
| 15.08.2010 | காலை 10.00 - திண்டுக்கல் | மாலை 6.00 - மதுரை |
| 16.08.2010 | காலை 10.00 - பெரம்பலூர் | மாலை 6.00 - அரியலூர் |
| 22.08.2010 | மாலை 6.00 - நாகை | |
| 23.08.2010 | மாலை 6.00 - புதுச்சேரி | |
| 24.08.2010 | மாலை 6.00 - சென்னை | |
| 25.08.2010 | மாலை 6.00 - விழுப்புரம் | |
| 28.08.2010 | மாலை 6.00 - தருமபுரி | |
| 29.08.2010 | காலை 10.00 - கிருட்டிணகிரி | |

கழகத் தோழர்கள் உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– தலைமைக்கழகம்**

## தலையங்கம்

# “பட்டியல்” தயாரிப்பு தீவிரமாகட்டும்!

கழகத்தின் மாநில செயற்குழு ஆகஸ்ட் முதல் தேதி திருச்சிராப் பள்ளியில் கூடி கழகத்தின் கடந்த கால செயல்பாடுகளை பரிசீலித்து இயக்கத்தின் அடுத்தக்கட்ட நகர்வுகளைப் பற்றி கலந்துரையாடி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. கழகப் பொறுப்பாளர்கள் திறந்த மனத்துடன் கருத்துகளை முன் வைத்து கழக வளர்ச்சிக்கான கருத்துகளைத் தெரிவித்தனர்.

குடிஅரசு தொகுப்புகளை தடைகளை எதிர்கொண்டு வெளியிட்ட நிலையில் அதை மக்கள் மன்றத்தில் அறிமுகப் படுத்தும் நிகழ்வுகளை தோழர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதனூடாக ‘குடிஅரசு’ தொகுப்புகளின் விற்பனைக்கான இயக்கமும் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. ‘குடிஅரசு’ இதழ்களில் புதைந்துள்ள பெரியார் சிந்தனைகள், பிரச்னைகளை பெரியார் அணுகிய பார்வை, வழமையான பார்ப்பனிய அணுகுமுறைகளிலிருந்து முற்றாக விடுவித்துக் கொண்டு, பெரியார் முன் வைத்த தனித்துவமான மாற்றுச் சிந்தனைகள், கருத்துருவாக்கத்திற்கு பின்பற்றிய நடைமுறைகள், நெருக்கடியான காலகட்டங்களில் இலக்கினை முன்னிறுத்தி, இயக்கத்தை நடத்திச் சென்ற வழிமுறைகள், ஆட்சிகளை ஆதரித்தாலும் குறைகளைக் கடுமையாக சுட்டிக்காட்டியமை; பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை அடையாளப்படுத்தி, மக்கள் மன்றத்தை பார்ப்பனருக்கு எதிராக அணி திரட்டிய தலைமைத்துவம், பெரியார் இயக்கம் நடத்திய மாநாடுகளில் தனிநபர் துதிகள் ஏதுமின்றி கொள்கைப் பார்வையை முன்னிறுத்தி நடத்தியமை, ‘கழகம் கட்டுப்பாடு’ என்ற கட்டுக்குள் கொள்கைகளைப் புதைத்துவிடாமல், கொள்கைக்காகவே இயக்கம் என்ற புரிதலோடு பெரியார் மேற்கொண்ட நெகிழ்ச்சிப் போக்குகள் போன்ற பல்வேறு தளங்களில் விரிவான வெளிச்சத்தை பெரியாரின் எழுத்துகளும், பேச்சுகளும் முன் வைத்துள்ளன. இந்தப் புரிதல்களோடு காலத்தின் தேவைக்கேற்ற செயல்முறைகளை வகுத்திட பெரியாரின் சிந்தனைகள் வழிகாட்டும் விளக்காக அமையும் என்பதில் இரண்டு வித கருத்துகளுக்கு இடமில்லை. இதற்கான பயிலரங்குகளை கழகத்தோழர்களிடையே நடத்தப்பட வேண்டும்.

சாதி, தீண்டாமைக்கு எதிராக கழகம் கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கி மூன்று கட்டப் பரப்புரை இயக்கங்களை நடத்தி முடித்துள்ளது. தீண்டாமை வடிவங்களையும், சட்டத்தைப் புறந்தள்ளிவிட்டு, அதற்கு எதிராக செயல்படும் தனியார், அரசு நிறுவனங்கள் பற்றிய பட்டியலையும் தயாரிக்கும் பணி, இப்போது கழகத்தின் முன் நிற்கிறது. இப்பணிகளில் இதுவரை ஈடுபடாத தோழர்கள், இனி முனைப்பு காட்டி செயல்பட வேண்டியது அவசியமாகும். ஊர், பெயர், முகவரிகளோடு நாம் வெளியிட்டு வரும் ‘தீண்டாமை’க் குற்றவாளிகளின் பட்டியல் மீது காவல்துறை கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதாக செய்திகள் வருகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சாதி வெறியர்களின் ஒடுக்குமுறைகளுக்கு கடிவாளம் போட வேண்டிய கடமை நம்முன் உள்ளது.

மூத்த பெரியார் தொண்டர் இலால்குடி முத்து செழியன் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் பேசும்போது தெரிவித்த ஒரு கருத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பெரியார் காலத்தில் நேரடியாக பார்ப்பனர்களை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை இருந்தது. ஆனால், இப்போது பார்ப்பனியத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதவர்களின் சாதி ஒடுக்கு முறைக்கு எதராக செயல்படுவது என்பதுதான் மிகவும் கடினமானது; ஆபத்தானது. அதை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சரியாக சுட்டிக்காட்டினார். அரசியல் கட்சிகளோ, முற்போக்கு சிந்தனைகள் கொண்ட அமைப்புகளோ, சாதி தீண்டாமைப் பிரச்னைகளை, தங்களின் “தீண்டாமைப் பட்டியலுக்குள்” தள்ளிவிட்ட நிலையில், பெரியார் திராவிடர் கழகம் இந்தக் களப்பணியில் இறங்கி யிருக்கிறது. சட்டங்களை செயல்பட வைப்பதற்கு மக்களிடம் விழிப்புணர்வும், தன்னம்பிக்கையும் அவசியமாகிறது. அரசு நிர்வாக அமைப்புகளான காவல்துறையும், வருவாய்த் துறையும், அரசியல் கட்சிகளும்கூட தீண்டாமைக் கொடுமைகளை கண்டும் காணாமல் ஒதுங்கியே நிற்கின்றன.

இந்த நிலையில் பெரியார் திராவிடர் கழகம் இந்தக் கொடுமைகளுக்கு எதிராகத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தை மேலும் முன்னெடுத்து சாதி, தீண்டாமையற்ற சமூகத்தை நோக்கி நகர்த்துவதே சரியான பெரியாரியத் தொண்டாகும். கடமையாற்ற தோழர்கள் தீவிரமாக களமிறங்க வேண்டுகிறோம். பட்டியல் தயாரிப்பில் தோழர்கள் முனைந்து செயல்பட்டு, உடனடியாக கழக ஏட்டுக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம். மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் போன்றவர்களே இரட்டைக் குவளை பற்றி வெளிப்படையாக பேசியிருப்பது நமது இயக்கத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

விரைந்து களமிறங்குவீர்!

# இந்துத்துவ சக்திகளுக்கு பதிலடி: ‘உண்ணும் விரதம்’ நடத்தச் சென்ற கழகத்தினர் கைது




8.7.2010 வியாழன் காலை ஈரோடு மாவட்டக் கழகத்தின் சார்பில் சூரம்பட்டி நால்ரோட்டில் உண்ணும் விரத போராட்டம் அறிவிக்கப்பட்டது. ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகே மேம்பாலம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்து நிதி ஒதுக்கீடு செய்து பணிகளும் தொடங்கிவிட்டன. இந்து முன்னணி, பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். கும்பல், ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் நிலம் மீட்பு இயக்கம் என்ற பெயரில் அந்த மேம்பாலம் கட்டக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டம் நடத்தியது. மேம்பாலம் கட்டினால், கோவில் மேம்பாலத்தின் அடியில் போய் விடும் என்பதால், காலுக்கடியில் அம்மனா? என சுவரொட்டியும், கடை அடைப்பு செய்யச் சொல்லியும் மிரட்டினார். பன்னீர்செல்வம் பூங்காவில் தினமும் பள்ளிக் குழந்தைகள் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் காலை மாலை இரு நேரங்களிலும் அந்த சாலை வழியாக செல்கின்றனர். மிகுந்த போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாக அந்த இடம் உள்ளது. ஆகவேதான் தமிழக அரசு மிகுந்த பொருட் செலவில் அந்த இடத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க பொது மக்கள் நலன் கருதி அந்த மேம்பாலத்தைக் கட்டுகிறது.

8.7.2010 வியாழன் அன்று காலை ஈரோடு மின் வாரிய அலுவலகம் முன்பு, மேம் பாலம் கட்டுவதை நிறுத்தக் கோரி இந்து முன்னணிக் கும்பல் சாகும் வரை உண்ணா விரதம் போராட்டத்தை அறிவித்தது. இதைக் கேள்விப்பட்டவுடன் கழகத்தின் சார்பில் மேம்பாலம் கட்டுவதை தொடர வேண்டும் எனவும், விரைவில் கட்டி முடிக்கக் கோரி யும், உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் சொன்ன இடத்திற்கு நேர் எதிரில் உண்ணும் விரதம் நடத்தப் போவதாக காவல்துறைக்கு தெரிவிக்கப் பட்டது. காவல்துறை உடனே இரு போராட்டங்களுக்கும் தடை விதித்தது. தடையை மீறி இரு தரப்பும் போராட்டம் செய்ய முனைந்தபோது காவல்துறை அனைவரையும் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தது. இதில் கழகத்தின் சார்பாக நடைபெற்ற உண்ணும் விரதப் போராட்டத்திற்கு மாவட்ட அமைப் பாளர் வெ. குமரகுருபரன் தலைமையில் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் முன்னிலையில் 23 தோழர்கள் கலந்து கொண்டு கைதாகி சிறைக்குச் சென்றனர். பின்னர் ஒரு வாரம் கழித்து 13.7.2010 அன்று பிணையில் வெளி வந்தனர்.


13.7.2010 செவ்வாக்கிழமை மதியம் 2 மணியளவில் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் தலைமை யில் தோழர்கள் திரண்டு வந்து கோவை மத்திய சிறை வளாகத்தின் முன்பு வாயிலில் நின்று தோழர்களுக்கு வரவேற்பு அளித்தனர். பின்பு காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் சிறை மீண்ட தோழர்களுக்கு வரவேற்பு, பாராட்டுக் கூட்டம், கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மாவட்ட தலைவர் நாத்திக சோதி, கோவை கதிரவன், ஈரோடு இரத்தினசாமி, குமர குருபரன், இராம. இளங்கோவன் ஆகியோர் உரைக்குப் பின்பு இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

பின்னர் தோழர்கள் அனைவரும், நிவாசு, கோபி செயராமன், நாத்திகசோதி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த வாகனங்கள் மூலம் கோவையிலிருந்து ஈரோடு நோக்கி புறப்பட்டனர். வழியில் விசயமங்கலத்தில் அப்பகுதி செயலாளர் விசு, தோழர்களுடன் இணைந்து வரவேற்பு அளித்தார். மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், அங்கிருந்த கழக கொடிக் கம்பத்தில் கொடி யேற்றி வைத்தவுடன் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. பின்னர் நேராக ஈரோடு சென்று பெரியார் சிலைக்குத் தோழர்கள் மாலை அணிவித்தனர். அதன் பின்னர் தோழர்கள் தமது இல்லங்களுக்குச் சென்றனர். போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைக்குச் சென்ற கழகத் தோழர்கள்:

இராம. இளங்கோவன், ஈரோடு இரத்தினகிரி, வெ. குமரகுருபரன், சதுமுகை பழனிச்சாமி, லெமூரியன், இராசேந்திரன், அர்ச்சுனன், அருளானந்தம், திருமூர்த்தி, மாதுராசு, வேணுகோபால், பிரபு, திரு முருகன், சுப்ரமணியன், சிவா, நாகராஜ், முருகானந்தம், பேரறிவாளன், துரை, அனீஸ், விவேக், சித்திக், இரவி ஆகியோர்.

## பெரியார் குடும்பத்தைச் சார்ந்த டாக்டர் நாகமணி பதக்கம் பெற்றார்

டாக்டர் எம். நாகமணி, எம்.டி.ஓ.ஜி., அவர்கள், மகப்பேறு மற்றும் பெண்கள் சிறப்பு நலம் பட்டமேற்படிப்பில் தங்கம் உட்பட 6 பதக்கங்களைப் பெற்றுள்ளார். டாக்டர் நாகமணி, திருவரங்கம் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் டாக்டர் எஸ். எஸ்.முத்து, டி.எஸ்.கல்யாணி இணையரின் இளைய மகள் ஆவார். கடந்த 10.7.2010 அன்று நடந்த எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் 20-வது பட்டமளிப்பு விழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம், டாக்டர் நாக மணிக்கு பதக்கங்களை வழங்கினார். இந்த நிகழ்வின் மகிழ்வாக கழக ஏட்டுக்கு டாக்டர் முத்து ரூ.1000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)



# சாதி – தீண்டாமை எதிர்ப்பு 3 ஆம் கட்டப் பயணம் மன்னையில் நிறைவு

*குடந்தையிலிருந்து தொடங்கிய 3 ஆம் கட்ட சாதி–தீண்டாமை ஒழிப்புப் பரப்புரைப் பயணக் குழுவின் பயணச் செய்திகளின் தொகுப்பு. ஜூன் 8 ஆம் தேதி இதழின் தொடர்ச்சி:*

1.72010 அன்று மாலை 5.45 மணியளவில் பட்டவர்த்தி பேருந்து நிறுத்தம் அருகே பரப்புரை பயண விளக்கக் கூட்டம் நடைபெற்றது. வில்பர்ட் சாதி ஒழிப்பு பாடல் பாடினார். பயணத்தின் நோக்கத்தை விளக்கி மாவட்ட துணைத் தலைவர் ரசித்கான், சேலம் கோகுலகண்ணன் உரையாற்றினர்.

6.45 மணியளவில் மணல்மேடு பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் வில்பர்ட் சாதி ஒழிப்பு பாடல் பாடினார். தனவேந்திரன் (ஏ.எ.இ.), ரசித்கான், சேலம் கோகுலக் கண்ணன் உரையாற்றினர். ரசித்கான் தனது உரையில் சட்ட எரிப்புப் போராளி மணல்மேடு வெள்ளைச்சாமியின் தியாகத்தை நினைவு கூர்ந்தார். தோழர் கோபால் பயண குழுவினருக்கு குளிர்பானம் வழங்கினார். மணல்மேடு பகுதியின் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெகஜீவன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

7.45 மணியளவில் பந்தநல்லூர் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில், வில்பர்ட் சாதி ஒழிப்புப் பாடல் பாடினார். தோழர்கள் தனவேந்திரன், இரசீத்கான், சேலம் கோகுலக் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். மயிலாடுதுறை பகுதியில் நடைபெற்ற மூன்று நாட்கள் பயணத்திலும் தோழர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடங்களை தோழர்கள் இளையராசா (மாவட்ட அமைப் பாளர்), மகேசு (மாவட்ட செயலாளர்), ரசீத்கான் (மாவட்ட துணைத் தலைவர்), சங்கர் (மாவட்ட பொருளாளர்), புத்தகச் சோலை விசயராகவன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

2.07.2010 அன்று மாலை 6 மணியளவில் மங்கை மடம் பேருந்து நிறுத்தம் அருகே பயணக் குழுவை சீர்காழி பெரியார் செல்வம் தலைமையில் தோழர்கள் வரவேற்றனர். சீர்காழி, திருவெண்காடு, தருமகுளம் ஆகிய ஊர்களில் மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை பரப்புரை நடந்தது. நாத்திகன், செந்தில் பாடல்களைப் பாட, தோழர்கள் தனவேந்திரன், புதியவன் உரையாற்ற, பெரியார் நம்பி மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினார். இரவு கே.பி.எஸ்.எம். கனிவண்ணன், தோழர்களுக்கு உணவு வழங்கி சிறப்பித்தார்.

3.7.2010 காலை தோழர்களுக்கு கழக ஆதரவாளர் தில்லை கோவிந்தன் உணவு வழங்கினார். மதியம் அல்லி விளாகம் இராசாங்கம் (தி.மு.க.), அவரது இல்லத்தில் அசைவ உணவு வழங்கினார். உணவு முடிந்த பின்பு தோழர்கள் பூம்புகார் கடற்கரை பகுதியை சுற்றிப் பார்த்தார்கள். 5.30 மணி அளவில் அல்லி விளாகம் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை தொடங்கியது. தொடர்ந்து வைத்தீஸ்வரன் கோயில் அருகிலும், சீர்காழியிலும் பரப்புரை நடந்தது. வில்பர்ட், நாத்திகன், செந்தில் பாடல்களைப் பாடினர். புதியவன் உரையாற்றினார். பெரியார் நம்பி மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். சீர்காழி கூட்டத்தில் மாவட்டத் தலைவர் பரசுராமன் பங்கேற்றுப் பேசினார். தோழர்களுக்கு கொள்ளிடம் ஒன்றிய பெரியார் தி.க. தலைவர் நந்த ராசேந்திரன் இரவு உணவு வழங்கினார்.

4.7.2010 அன்று மாலை 6 மணி அளவில் புதுப் பட்டிணத்தில் பரப்புரை தொடங்கியது. ஆச்சாள் புரம், கொள்ளிடம் ஆகிய ஊர்களில் பரப்புரை நடந்தது. தோழர்களுக்கான உணவு ஏற்பாட்டை காலையில் கழக ஆதரவாளர் ஆசிரியர் அமிர்த லிங்கம் வழங்கினார். மதிய உணவு மாவட்ட தலைவர் பரசுராமன் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இரவு உணவுக்கு கோ. கனிவண்ணன் (நகர துணைத் தலைவர்) ஏற்பாடு செய்தார்.

5.7.2010 அன்று காலை உணவு சி.ரமேசு (நகர அமைப்பாளர்) வழங்கினார். மதிய உணவு பா. பிரபாகரன் (நகர செயலாளர்) வழங்கினார். சீர்காழி பகுதியில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களிலும் நகர தலைவர் பெரியார் செல்வம், நந்த இராசேந்திரன், ச. செல்வேந்திரன், பா. அருண், இரா. மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியார் செல்வம் 3 நாட்களும் உடனிருந்து பொறுப்பேற்று செயல்பட்டார்.

5 ஆம் தேதி மாலை ஆடுதுறையிலிருந்து பயணம் தொடங்கியது. திருவிடைமருதூரில் பரப்புரை நடந்தது. 7.30 மணியளவில் நாச்சியார் கோவில் கடைவீதியில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. சோலை மாரியப்பன் தலைமை வகித்தார். கரிகாலன் வரவேற்புரை நிகழ்த்தினார். நாத்திகன் வில்பர்ட் பாடல்களைப் பாடியதைத் தொடர்ந்து, புதியவன், சாக்கோட்டை இளங்கோ ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகத் தவைலர் கொளத்தூர் மணி சாதி ஒழிப்புப் போராட்டம் பற்றியும் பெரியாரின் சாதி ஒழிப்பு கருத்துகளையும் விளக்கி உரையாற்றினார். பெரியார் நம்பி மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். பட்டுக்கோட்டை பாரி, வடசேரி சிவசுப்பிரமணியன் கலந்து கொண்டனர். தோழர்களுக்கு சோலை மாரியப்பன் இரவு உணவு வழங்கினார். இரவு தோழர்கள் சிற்பி இராசன் இல்லத்தில் தங்கினர்.

6.7.2010 அன்ற மாலை 5 மணி அளவில் நீடா மங்கலம் பெரியார் சிலை அருகே பரப்புரை நடந்தது. இரவு 7.30 மணியளவில் பயண நிறைவு பொதுக் கூட்டம் மன்னார்குடியில் நடைபெற்றது. இரா. காளிதாசு (நகர செயலாளர்) தலைமை தாங்கினார். சோலை மாரியப்பன் (மாவட்ட தலைவர்), பாரி, சிவசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகம் நடத்திய சாதி ஒழிப்பு பயணத்தை வாழ்த்தி த. சிவராமன் (மாநில அமைப்பாளர், விடுதலை வேங்கைகள்), தங்க. குமரவேல் (தமிழக மக்கள் விடுதலை இயக்கம்), சதா. சிவக்குமார் (ஆதி திராவிட முன்னேற்றக் கழகம்) ஆகியோர் பேசினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். கார்த்திகேயன் நன்றி கூறினார். பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு கழகத் தலைவர் நினைவு பரிசுகளை வழங்கினார். பொதுக் கூட்டத்துக்கான ஏற்பாடு களை காளிதாசு செய்தார்.

மூன்றாவது கட்டப் பயணம் மன்னார்குடியில் நிறைவடைந்தது.

**செய்தி தொகுப்பு : சி. இராவணன்**

**பயணத்திற்கு நன்கொடை வழங்கியவர்கள்:**

| | | |
|---|---|---|
| தஞ்சை மணிவண்ணன் | - | ரூ.5000 |
| சிற்பி இராசன் | - | ரூ.4000 |
| பாப்பா நாடு சிவா | - | ரூ.2000 |
| மன்னை மோகன் | - | ரூ.1000 |
| முருகையன் | - | ரூ.500 |

ஒலி பெருக்கி - திருப்பூர் துரைசாமி

5000 துண்டறிக்கைகளை அச்சிட்டு வழங்கியது மயிலாடுதுறை பெரியார் திராவிடர் கழகம்.

| | | |
|---|---|---|
| உண்டியல் வசூல் | - | ரூ. 22,240 |
| மொத்த வசூல் | - | ரூ. 34,740 |
| செலவு | - | ரூ. 34,383 |
| புத்தக விற்பனை | - | ரூ.7050 |

பயணத்தில் தொடர்ந்து பங்கேற்கும் தோழர்கள்: சென்னை சுகுமார் (பயணக் குழுத் தலைவர்) திருவாரூர் இன்பத்தமிழன், பெருந்துரை, துரை, ஆண்டி மடம் வில்பர்ட், பாடாலூர் சுதாகர், திருப்பூர் இராவணன், பிரபு. பயணத்துக்கான முன்னேற்பாடுகளைச் செய்தவர்: தாமரைக் கண்ணன். தஞ்சை, நாகை மாவட்டக் கழகத் தோழர்கள், பயணக் குழுவினரோடு இணைந்து பயணத்தின்வெற்றிக்கு செயல்பட்டனர்.

# சென்னையில் கழக வழக்கறிஞர்களுக்கு பாராட்டு





‘குடிஅரசு’ அறிமுக விழாவும், குடிஅரசு வழக்கில் வாதாடிய வழக்கறிஞர்களுக்கு பாராட்டும் தென்சென்னை மாவட்டக் கழகம் சார்பில் 28.7.2010 மாலை மந்தவெளி மார்க்கெட்டில் நடைபெற்றது.

சம்பூகன் கலைக் குழுவினர் இசை நிகழ்ச்சியும், குடந்தை சிற்பி இராசனின் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சியும் நடைபெற்றது. தொடர்ந்து கழக வழக்கறிஞர்கள் பாராட்டப்பட்டனர். கூட்டத் தலைவர் மாவட்ட செயலாளர் உமாபதி, அன்பு தனசேகர் உரையாற்றினர். கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வை. இளங்கோவன், சு. குமாரதேவன், ப. அமர்நாத், எம்.பி. இராஜவேலாயுதம், எம்.பி. வைரக்கண்ணன், து. இராஜ்குமார், எம். முருகன், ராவுத்தர் புகாரி, செல்வி சோஃபி ரொசாரியோ, கே.ஏ. பிரபாகரன் ஆகியோருக்கும், வழக்கு மன்றப் பணிகளுக்கு உறுதுணையாக தொடர்ந்து செயல்பட்ட கழகத் தோழர் மயிலை சுகுமாறனுக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விருது மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, வை. இளங்கோவன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். சுகுமாறன் நன்றி கூறினார்.

# சீமான் கைதுக்குக் கண்டனம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முறைகள் எல்லைமீறிக் கொண்டிருக்கின்றன. "நாம் தமிழர் இயக்க"த் தலைவர் சீமான் இரண்டாவது முறையாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை விமர்சித்தவர்களும் சுவரொட்டி ஒட்டியவர்களும் கைது செய்யப்பட்டனர். கருத்துகளைப் பரப்பி கலாச்சாரப் புரட்சிக்கு வழிவகுத்த பெரியார் மண்ணில் கருத்துரிமையை காவல்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தி.மு.க. அரசின்ள முயற்சி, பெரியார் - அண்ணா கொள்கைகளுக்கு எதிரானது என்பதை இக்குழு சுட்டிக்காட்டி கண்டிக்கிறது.

3. எண்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு முழுவதும் பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்கள் பெரியார் அவர்கள் காலத்திலிருந்து தங்குதடையற்று நடந்து வந்த நிலைக்கு மாறாக சென்னை மாநகரில் கடந்த சில ஆண்டுகளாகவும், கோவை மாநகரில் பல ஆண்டு களாகவும் காவல் துறையிடம் அனுமதிக்கு அணுகும்போது வெகுசிலரின் எதிர்ப்புக்குப் பணிந்தும், காவல்துறை அதிகாரி களின் இந்துமத உளவியல் காரணமாகவும் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலங்களுக்கும் சில வேளைகளில் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதி மறுப்பது வழக்கமாகிவிட்டது.

அதேவேளை அரசின் மதச்சார்பற்ற தன்மைக்கு எதிராக அரசு அலுவலகங்களில் குறிப்பாகக் காவல் நிலையங்களில் கடவுள் படங்களை வைப்பதும், இந்துமத பூஜைகள் நடத்துவதும், புதிது புதிதாகக் கோவில்கள் கட்டுவதும் அரசு விழாக்களில்கூட பூமி பூஜை, யாகம் என நடை பெறுவதும் (அரசியல் சட்டம் வழி காட்டும் அரசியல் மனப்பான்மை, ஆய்வு மனப்பான்மை வளர்த்தல் ஆகியவற்றுக்கு முரணாகவும்) இயல்பாகிப் போய்விட்டது.

அதுபோலவே மாணவர்களின் கல்வியைக் குலைக்கும் வகையில் அரையாண்டுத் தேர்வின்போது அய்யப்பன் பேராலும், முழு ஆண்டுத் தேர்வின் போது மாரியம்மன், காளியம்மன் போன்றவற்றின் பேராலும் இரவு முழுவதும் ஒலிபெருக்கிகளை அலறவிடவும், திரவிழாக்களின் பேரால் இரவு முழுவதும் மேளம் அடிக்கவும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக காவல்துறை அனுமதிப்பதும் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறது.

எனவே, அவ்வாறான விதிமீறல்களின்போது உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும் அரசாணைகளையும் சுட்டிக்காட்டி உரியோர்களுக்கு மனு அளித்தும், உயர் அதிகாரிகளுக்கும் அரசுக்கும் அதன் நகல்களை அனுப்பியும் மதச்சார்பின்மைக்கும் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் எதிரான செயல்களை நிறுத்துமாறு முதல்கட்டமாக வேண்டுகோள் அனுப்புவது என்றும் - வேண்டுகோளைப் புறக்கணித்து சட்டவிரோதமாகச் செயல்படுவார்களேயானால் ஆயுதபூஜை போன்ற ஏதேனும் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து அரசு அலுவலகங்களுக்குள் குறிப்பாக காவல்துறை அலுவலகங்களுக்குள் நுழைந்து அத்தகைய சட்டவிரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. நீண்ட நெடுங்காலங்களாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடி சிறுபான்மை மக்களின் நிலைமைகளையும் வளர்ச்சிகளையும் அறிந்து அப்பிரிவின் முறையான முன்னேற்றத் திட்டங்களை வகுப்பதற்கு வாய்ப்பாக 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் "சாதிவாரிக் கணக்கெடுப்பை"யும் செய்ய வேண்டுமென மத்திய அரசினை வலியுறுத்துகிறது.

5. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தின் கீழ் 207 பேர் அர்ச்சகர் பயிற்சியை முடித்தும் அர்ச்சகர் ஆக முடியாத நிலையே நீடிக்கிறது. பெரியார் நெஞ்சில் தைத்த முள் அப்படியே நீடிக்கிறது. மக்கள் மன்றத்தால் ஏற்கப்பட்டு, நீதிமன்றங்களால் தடுக்கப்பட்டுவரும் இந்த சமூக இழிவு ஒழிப்புச் சட்டத்தை செயல்படுத்தும் முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென இக்குழு வலியுறுத்துகிறது.

6. மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும், உயர் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கான ஒதுக்கப்பட்ட இடங்களை முழுமயாக நிரப்பத் தக்க வகையில் மாணவர் சேர்க்கை விதிகளை வகுத்தளிக்குமாறு மத்திய மனித வளத் துறை அமைச்சகத்தையும் மத்திய அரசையும் இச்செயற்குழு வற்புறுத்துகிறது.

7. புதிய பொருளாதாரக் கொள்கை அமுலான பிறகு வேலை வாய்ப்புகள் தனியார் துறைகளில் மட்டுமே அதிகம் கிடைக்கக்கூடிய நிலையில் தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மத்தியில் நடைபெறும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி பெரும் தொழில் நிறுவனங்களின் மிரட்டலுக்குப் பயந்து இந்த முக்கியமான சமூகநீதிக் கோரிக்கையை கிடப்பில் போட்டுவிட்டதை இக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழக அரசும் இதில் கண்டும் காணாததுபோல ஒதுங்கி நிற்காமல் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து மத்திய அரசை வற்புறுத்த முன்வரவேண்டும் என்று செயற்குழு வற்புறுத்துகிறது.

8. கழக உறுப்புகளோ, உறுப்பினர்களோ நூல், துண்டறிக்கை போன்றவற்றை கழகத் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோரின் முன் அனுமதியும் ஒப்புதலும் பெறாமல் கழகத்தின் பெயரால் (பெரியார் திராவிடர் கழகம்) வெளியிடக் கூடாது என்று இச்செயற்குழு முடிவு செய்கிறது.

### செயற்குழுவில் இரங்கல்

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக மக்களிடம் பரப்புரை நடத்திய கழகத் தோழர் பேராசிரியர் சீசகன், கழகச் செயல்வீரர்கள் பல்லாவரம் செல்வராசு, இருகூர் சிவராசன், பெரியார் பெருந்தொண்டர் அவல்பூந்துறை வெங்கடாசலம், சென்னை மடிப்பாக்கம் தீனதயாளன், சென்னை பூவராசன், கரூர் நகர செயலாளர் குமார், மதுரை தோழர் கைவண்டி கருப்புவின் மருமகன், ஈரோடு சந்திரசேகர் ஆகியோர் மறைவுக்கு கழகச் செயற்குழு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

# தமிழ்நாட்டில் இரட்டைக் குவளை ப. சிதம்பரமும் கூறுகிறார்

தமிழ்நாட்டில் இன்னும் இரட்டை தம்ளர் முறை அமுலில் உள்ளது என்று உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார். மதுரையில் ஜூலை 31 ஆம் தேதி நடைபெற்ற கக்கன் நூற்றாண்டு விழாவில் சிறப்பு மலரை வெளியிட்டு உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்:

"நாட்டில் இன்னும் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் செல்ல அனுமதி இல்லாத நிலை உள்ளது. தமிழகத்தில் தீண்டாமை இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. இரட்டை தம்ளர் முறை இன்னும் தொடர்கிறது. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, ஆண்-பெண் காதலித்தால் பிரச்னை ஏற்படுகிறது. அதனால் கவுரவ கொலைகளும் நடக்கின்றன. இங்கேயே இப்படி என்றால் பீகார், உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களின் நிலையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

உத்திர பிரதேசத்தில் சத்துணவு பரிமாறும் பணிக்கு தாழ்த்தப்பட்டோரை நியமித்தால் உயர்ந்த சாதியினர் அப்பள்ளியிலிருந்து தங்களது குழந்தைகளை வேறு பள்ளியில் சேர்க்கும் அவல நிலை உள்ளது."

– "தினமணி" (ஆகஸ்ட் 1, திருச்சிப் பதிப்பு) சென்னை பதிப்பில் தினமணி இச்செய்தியை வெளியிடவில்லை.

# தோழர் கீசகன் முடிவெய்தினார்



மக்களிடம் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகள் வழியாக பகுத்தறிவுக் கருத்துகளை பரப்பி வந்த உறுதியான பெரியார் தொண்டர் கீசகன் (68) உடல்நலமின்றி கடந்த 28 ஆம் தேதி சென்னையில் முடிவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

1967 ஆம் ஆண்டில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். அவரது துணைவியார் பெயர் கமலா. 40-க்கும் மேற்பட்ட போராட்டங்களில் பங்கேற்று சிறைச் சென்ற கீசகன், திராவிடர் கழகத்திலிருந்து விலகி, பெரியார் திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்டார். பறக்கும் படை என்ற பெயரில் சொந்த செலவில் ஒலிபெருக்கி, ஒளி விளக்குகள் பொருத்தப்பட்ட ஒரு வாகனத்தை உருவாக்கி, ஊர்தோறும் சென்று, அந்த வாகனத்தையே மேடையாக்கி, மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள் வழியாக மூட நம்பிக்கை ஒழிப்புப் பரப்புரைகளை நடத்தி வந்தார்.

அவரது இயற்பெயர் ஜெகன் மோகன். மகாபாரதம் புராணத்தில் 'அரக்கனாக' சித்தரிக்கப்பட்ட விராட பருவத்தின் அரசனான கீசகன் பெயரை, கலகப் பண்பாட்டின் அடையாளமாக தனது பெயராக சூட்டிக் கொண்டார். தனது மகனுக்கும், மகளுக்கும் சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தினார். அவரது விருப்பப்படி அவரது கண்கள் கொடையாக வழங்கப்பட்டன. சென்னை மருத்துவமனையில் அவர் முடிவெய்திய சேதியறிந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள், சிற்பிராசன் ஆகியோர் மருத்துவமனை விரைந்து இறுதி மரியாதை செலுத்தினர்.

சென்னையிலிருந்து அவரது உடல் அவரது சொந்த ஊரான பழனிக்கு அருகே உள்ள நரிக்கல்பட்டி கிராமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அடுத்த நாள் 29.7.2010 அன்று காலை 11 மணியளவில் அமராவதி நதிக்கரை ஓரமுள்ள இடுகாட்டில் எவ்வித மூடச்சடங்குகளும் இல்லாமல் அடக்கம் செய்யப் பட்டது. இறுதி ஊர்வலத்தில் தோழர்கள் கருஞ்சட்டையணிந்து ஒலி முழக்கங்களை எழுப்பி வந்தனர்.


திருப்பூர் அங்ககுமார் தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில், கழகத் தோழர்கள் திண்டுக்கல் சம்பத், இரவணா சக்திவேல், ப. குமாரபாளையம் கைலாசம், நங்கவல்லி அன்பு, கரூர் தனபால் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். கழகத் தோழர்கள் ஈரோடு இரத்தினசாமி, இராம. இளங்கோவன், மதுரை மாயாண்டி, குமாரபாளையம் சாமிநாதன், ஒட்டன்சத்திரம் பெரியார் நம்பி மற்றும் கடத்தூர், காரத் தொழுவு, உடுமலை பகுதியைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 5th August 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஆகஸ்டு 12, 2010 | புரட்சி 9 | முழக்கம் 31 | விலை: ரூ.2.50


## கொள்கை துரோகிகளின் முகத்திரை கிழிந்தது

# கோவை 'குடிஅரசு' அறிமுக விழா எழுச்சி!





பெரியாரின் சிந்தனைகளை பெரியார் திடலுக்குள் முடக்கிப் போட்டுக் கொண்டு பெரியாரியலுக்கு துரோகம் செய்யத் துடித்த தி.க. தலைவர் கி.வீரமணியின், பெரியாரிய துரோகத்தை, பெரியார் திராவிடர் கழகம் முறியடித்து, 'குடிஅரசு' தொகுப்புகளை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளது. தன்னைத் தவிர பெரியாருக்கு, எவருமே உரிமை கோர முடியாது என்று கற்பனைக் கனவில் மிதந்து கொண்டிருந்த கி. வீரமணிக்கு, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பலத்த அடியைத் தந்தது. 'குடிஅரசு' உரிமை, தனது கரங்களைவிட்டுப் போய் விட்டதால் பதறிப்போன வீரமணி, அடுத்து, சொத்துகளும் பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் நிலை தடுமாறி நிற்கிறார். இது வரை 'பெரியார் திராவிடர் கழகம் ' என்ற அமைப்பை முற்றிலுமாக புறக்கணித்து, கழகத்தின் பெயரைக்கூட குறிப்பிடாமல் பாசாங்கு செய்தவர்கள், இப்போது பெரியார் திராவிடர் கழகத்தை எதிர்த்து ஊர் ஊராகப் பொதுக் கூட்டங்களை நடத்துகிற நிலைக்கு வந்து விட்டனர். மக்கள் மன்றத்தில் தனிமைப்பட்டுக் கிடக்கும் அவர்கள், பெரியார் திராவிடர் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்களை கீழ்த்தரமாக தனிப்பட்ட முறையில் நரகல் நடையில் பேசுவதைக் கண்டு மக்கள் எள்ளி நகையாடி வருகிறார்கள். பொது மக்களே, இல்லாமல், தாங்களே வாகனங்களில் ஆட்களை ஏற்றி வந்து கூட்டத்தில் உட்கார வைத்து, 'நரகல் நடை' பேச்சுகள் முடிந்த பிறகு "கூட்டத்"தினரையும் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு போய் விடுகிறார்கள். பெரியார் திராவிடர் கழகத்தை 'போலிகள்' என்றும், அவர்களை எச்சரிக்கை செய்வதற்காகவே பொதுக் கூட்டம் என்றும் சுவரொட்டிகளை ஒட்டி வருகிறார்கள். 'குடிஅரசு' தொகுப்புகளை மக்கள் உரிமையாக்கிய பெரியார் திராவிடர் கழகத்துக்கு எதிராக களமிறங்கியுள்ள "திருவாளர் 15 லட்சம்" குழுவினரின் (கழகம் 'குடிஅரசு'தொகுப்புகளை வெளியிட்டதற்காக வீரமணி கழகத்திடம் கேட்ட தொகை ரூ.15 லட்சம்) பொய் வாதங்களை அவர்களின் கொள்கை துரோகங்களை மக்கள் மன்றத்தில் அம்பலமாக்குவோம் என்று கோவை 'குடிஅரசு' அறிமுக விழாவில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், பொறுப்பாளர்களும் உறுதி ஏற்றனர்.

பெரியாரியத்தையும் 'குடிஅரசு' சிந்தனைகளையும் மக்கள் மன்றத்துக்கு கொண்டு செல்ல திட்டமிட்ட பெரியார் திராவிடர் கழகத்திடம் "எங்கள் துரோகத்தையும் விட்டு விடாதீர்கள். அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று 'திருவாளர் ரூ.15 லட்சம் குழு' தாமாகவே முன் வந்துள்ள நிலையில், அதைச் சந்திக்க பெரியார் திராவிடர் கழகம் தயார் என்று கோவை 'குடிஅரசு' அறிமுக விழாவில் உரையாற்றிய பலரும் குறிப் பிட்டனர்.

ஆழமாக பெரியாரின் 'குடிஅரசு' சிந்தனைகளை எடுத்துரைத்து 'திருவாளர் 15 லட்சத்தின்' துரோகங்களையும் அக்குவேறு ஆணிவேராக கிழித்தெறிந்தது கோவை 'குடிஅரசு' அறிமுக விழா.

### நிகழ்ச்சி விவரம்

குடிஅரசு அறிமுக விழா பொதுக்கூட்டம் 8.8.2010 ஞாயிறு மாலை 6 மணியளவில் கோவை சத்ய நாராயண அரங்கில் எழுச்சியுடன் நடை பெற்றது. கோவை மாநகரக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவுக்கு வே. கோபால் தலைமை தாங்கினார். நிகழ்வில் சூலூர் வீரமணி, பொள்ளாச்சி கி.விசயராகவன், கா.சு. நாகராசன், பொள்ளாச்சி இரா. மனோகரன், சி.கே.எம். தமிழ்ச்செல்வி, ந. பன்னீர் செல்வம், திருவரங்கம் சீனி. விடுதலை அரசு, வெ.ஆறுச்சாமி ஆகியோர் உரையாற்றினர். கோவை பெரியார் திராவிடர் கழக வழக்கறிஞர் அணி சார்பாக குடிஅரசு வழக்கில் நீதிபதிகள் சந்துரு, எம்.ஜெயபால் மற்றும் இப்ராகிம் கலிபுல்லா, கிருபாநிதி அமர்வு வழங்கிய தீர்ப்புகள் தமிழாக்கம் செய்யப்பட்டு 'பெரியாருக்கு விடுதலை' எனும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. 48 பக்கங்கள் கொண்ட இந்நூலை பேராசிரியர் கனல் மைந்தன் வெளியிட, வழக்கறிஞர் துரைசாமி பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து - பேராசிரியர் கனல் மைந்தன், பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் துரைசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

'குடிஅரசு' இதழ்களில் புதைந்துள்ள பெரியாரின் ஆழமான சமூக சிந்தனைகள் மற்றும் வீரமணியின் கொள்கை துரோகங்களை விரிவாக விளக்கி, அனைவரும் பேசினர். விழா மேடையில் 15 தோழர்கள் 'குடிஅரசு' தொகுப்புகளைப் பெற்றனர். வழக்கில், கடுமையாக உழைத்து வாதாடிய கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய வழக்கறிஞர்களின் தொண்டினைப் பலரும் பாராட்டினர். தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்த வழக்கறிஞர்கள் சி. லெனின், ப. ஜீவா, ரகு, லூயிஸ் , இ.மு. சாஜித் ஆகியோருக்கு கழகத் தலைவர் துண்டு அணிவித்து பாராட்டினார். கோவை மாவட்டம் முழுவதிலிருந்தும் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். மாவட்ட மாநாடு போல் நடந்த நிகழ்ச்சி 11 மணி வரை நீடித்தது. இறுதி வரை தோழர்கள் உரைகளைக் கேட்டனர். ம.ரே. ராசக்குமார் நன்றி கூறினார்.

**– நமது செய்தியாளர்**

**வந்த கடிதம்**

### ஒரு 'விடுதலை' வாசகரின் உள்ளக் குமுறல்!

தந்தை பெரியார் அடிதட்டு மக்களின் சுவாசக் காற்று! அவர் இல்லாவிட்டால் என்னைப் போன்றோர் பலர் அரசு உயர் பதவிகளை கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது. தலைமுறை தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கும் எம் போன்றோர் தந்தை பெரியாரின் கொள்கைப் பிரச்சாரம் இன்னும் நீண்ட காலத்துக்கு தேவை என உணர்கிறோம். பார்ப்பனர்கள் பெரியாரையும் அவரது இயக்கத்தையும் பார்த்து பயந்த காலம் தற்போது தலைகீழாக மாறிவிட்டது. அவரது தொண்டர்கள் என சொல்லிக் கொள்பவர்களிடத்தில் அய்யாவின் போர்க்குணம் மருந்துக்குக்கூட பார்க்க முடியாமல் போய்விட்டது. எல்லோரும் பெரியாராக இருந்து விட முடியாது என சமாதானம் செய்து கொண்டாலும் பெருங்காயம் இருந்த காலி டப்பா என்று சொல்லக் கூடாதல்லவா? முக்கியமாக பெரியார் சேர்த்து வைத்த புகழையும், உடைமைகளையும், கொள்கைகளையும் குடும்ப உரிமை என ஆக்கி வாரிசுகளை உருவாக்கிக் கொள்வது பெரியாருக்குச் செய்யும் மிகப் பெரும் துரோகம் ஆகும். 'மன்னிக்க முடியாத குற்றம்' வரலாற்றில் பதிவு செய்யப்படும்.

விளம்பர வசதி - பண வசதி இல்லாவிட்டாலும் பெரியார் கொள்கைளை சுமந்து பயணிக்கும் தன்னலமற்ற பெரியார் திராவிடர் கழக இளைஞர்களை பார்த்து பரவசமும் பெருமையும் நம்பிக்கையும் பெறுகிறேன்! வாழ்க!

**– பெயர் சொல்ல விரும்பாத 'விடுதலை' வாசகர்**

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

**கரூரில் குடிஅரசு அறிமுகம்**



25.7.2010 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு கரூர் உழவர் சந்தை எதிரிலுள்ள காவேரி அம்மாள் திருமண மண்டபத்தில் "இராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி!" டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்புக் கருத் தரங்கம் நடைபெற்றது. கொங்கு வேளாளர் பேரவையின் கரூர் மாவட்ட தலைவர் த.கார்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங் கில் தமிழர் தேசிய இயக்கத்தைச் சார்ந்த அ. சந்திரன் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழின பாதுகாப்பு இயக்கத்தைச் சார்ந்த கி.வெ.பொன்னையன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கரூர் மாவட்ட கழகத் தலைவர் கு.கி. தன பால் நன்றி கூறினார். கரூர் மாவட்ட டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்புப் பரப்புரை இயக்கம் சார்பாக இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மாலை 5 மணிக்கு 'குடிஅரசு' அறிமுக விழா சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. கரூர் கழகம் சார்பாக காவேரி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கரூர் மாவட்ட தலைவர் கு.கி. தனபால் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் க. முருகேசன், வெங்கமேடு பகுதி அமைப்பாளர் வெ. சரவணன், கிருஷ்ண ராயபுரம் இரா. காமராஜ ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பாளர் கு. ராசா வரவேற்புரையாற்றினார்.

ஆதித் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் நீலவேந்தன், கழகத்தின் பணிகளை பற்றி குறிப்பாக சாதி ஒழிப்பில் மற்ற அமைப்புகளைவிட பெரியார் திராவிடர் கழகம் வேகமாக செயல்படுவதையும், பெரியாரின் பேச்சுகளையும் எழுத்துகளையும் குடி அரசு தொகுதிகளாக எந்த பொருளாதார பின் புலமும் இல்லாதபோதும் வெளியிட்டிருப்பதும் மிகப் பெரிய சாதனை என்றும் பாராட்டிப் பேசினார்.

கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன், இன்று இருப்பதைப்போல நவீன அச்சடிக்கும் முறைகள் எல்லாம் இல்லாத 1925-லேயே பெரியார் குடிஅரசு வார இதழை தொடங்கியதைப் பற்றியும், தந்தை பெரியார் குளிர்சாதன வசதியே மகிழ்வுந்தில் வேண்டாம் என்று மறுத்து, சிக்கனமாக எளிமையாக வாழ்ந்து, சொத்துகளை சேமித்து வைத்ததையும், அதை பாதுகாப்பவர்கள் இன்று எவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு, பெரியார் கருத்தை வெளி யிடுவதையே தடுக்கிறார்கள் என்பதைப் பற்றியும் விரிவாக பேசினார். தான் மாணவராக இருந்த காலத்தில் பெரியார் நூலிலிருந்து ஒரு துண்டறிக்கை வெளியிடுவதற்கு பெரியாரிடம் அனுமதி கேட்டபோது, தாராளமாக வெளியிட லாம், நீங்கள் யாரிடமும் கேட்க வேண்டியதில்லை, கருத்துகள் எல்லாம் மக்களிடம் போய் சேர வேண்டும் என்பதுதான் என் விருப்பம் என்று பெரியார் கூறியதாகவும் குறிப்பிட்டார்.

நிறைவாக உரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "குடிஅரசு" வெளியிட கழகம் எடுத்த முயற்சிகள், திராவிடர் கழகம் சார்பாக கி.வீரமணியால், நீதிமன்றத்தில் தடை வாங்கப் பட்டது. நீதிபதி சந்துரு வெளியிடலாம் என தீர்ப்பு வழங்கியது. மீண்டும் கி.வீரமணி மேல் முறையீடு செய்து வழக்கை நடத்தாமல் காலத்தை கடத்தியது. அவைகள் எல்லாம் எப்படி முறியடிக்கப்பட்டன என்பதை பற்றியும், 'குடிஅரசு' தொகுப்பின் இன்றைய தேவை பற்றியும், விரிவாக பேசினார். தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த ப. பால முருகன் நன்றி கூறினார்.

**இராயக்கோட்டையில் கலந்துரையாடல்**

27.7.2010 அன்று காலை 10 மணிக்கு கிருட்டின கிரி மாவட்டம் இராயக்கோட்டை பகுதி கழகம் சார்பாக கலந்தாய்வுக் கூட்டம், பத்மாவதி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட அமைப் பாளர் தீ.குமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இதுவரை தமிழ் அமைப்பு களிலும், மார்க்சிய அமைப்புகளிலும் செயல்பட்டு வந்த பழனி, இன்றைய சூழ்நிலைக்கும், மக்களின் தேவைகளுக்கும் பெரியார் திராவிடர் கழகம் தான் அவசியம் என்பதை உணர்ந்து, இனி கழகத்தில் இணைந்து முனைப்புடன் செயல்படப் போவதாக அறிவித்தார். பெரியார் பெருந் தொண்டர் வெங்கட்ராமன், திராவிடர் கழகம் சொத்துக்களை விற்பதையும், இந்த சூழ்நிலையில் கழகம் பல சிரமங்களுக்கிடையே 'குடிஅரசு' வெளியிட்டதை யும் குறிப்பிட்டுப் பேசினார். தோழர்கள் வெங்கடேசன், பாலகிருஷ்ணன், கருணாகரன், இளம்பரிதி, ராசேந்திரன் ஆகியோர் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். பல புதிய தோழர்கள் உள்பட மொத்தம் நாற்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**பென்னாகரம் பொதுக்கூட்டம்**

27.7.2010 அன்று மாலை 6 மணிக்கு பென்னாகரம் பேருந்து நிலையம் அருகில் கழகம் சார்பாக "ஆகஸ்டு 15 - போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம்" நடைபெற்றது. மாவட்ட துணை அமைப்பாளர் மா.பரமசிவம் தலைமையில் நடைபெற்றது. தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் கொ.வேடியப்பன் உரையைத் தொடர்ந்து தலைவர் கொளத்தூர் மணி, 60, 70 ஆண்டுகளுக்கு முன்பு அடிமையாக இருந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இன்று ஓரளவு முன்னேறியும் இன்னும் முன்னேற முடியாமல் இருப்பதற்கும், குறிப்பாக மத்திய அரசின் உயர்கல்வியில் இடஒதுக்கீடு தர பார்ப்பனர்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றியும், அதை எதிர்க்க வேண்டியவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தீண்டாமையை நிலை நிறுத்துவது எந்த வகையில் நியாயம் என்றும் பேசினார். மேலும் தீண்டாமை ஒழிப்புக் காவல் பிரிவு செயல்படாமல் இருப்பதையும், அப்படி செயல்படாத தீண்டாமை

(4 ஆம் பக்கம்)

## மதக் கலவரத்தை உருவாக்கும் சூழ்ச்சி!

'இந்து'க்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கக் கோரி தமிழ்நாட்டில் பா.ஜ.க. இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், மாணவர் களைத் தூண்டிவிட்டு போராட்டம் நடத்து கிறார்கள். இஸ்லாமிய மாணவர்களுக்கும், கிறிஸ்தவ மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும்போது 'இந்து'க்களுக்கு ஏன் வழங்கவில்லை என்று கேட்கிறார்கள்.

'இந்து ஆதி திராவிட, 'இந்து' பிற்படுத்தப்பட்ட, 'இந்து' மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு மாணவர் களுக்கு இடஒதுக்கீடும், கல்வி உதவித் தொகையும், நீண்டகாலமாகவே வழங்கப்பட்டுத்தான் வருகிறது. 'இந்து' பார்ப்பனர்களுக்கு மட்டும்தான், அவர்கள், ஏற்கனவே ஆதிக்கசாதியினராக இருப்பதால், இடஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. 'இந்து' பார்ப்பன மாணவர்களுக்குக்கூட பொருளாதார அடிப்படையில் கல்விக் கடன் வசதிகள் வழங்கப் பட்டுத்தான் வருகின்றன. மாணவர்களிடையே 'இந்து - முஸ்லீம்' என்று அணிகளைப் பிரித்து அவர்களை மோதவிடும் சூழ்ச்சிதான் இந்தப் போராட்டத்தின் உள்நோக்கம்.

'இந்து' மாணவர் உதவித் தொகை கேட்கும் பார்ப்பன, பார்ப்பனிய சக்திகளுக்கு ஒரு கேள்வி!

கிராமங்களில் 'இந்து' தாழ்த்தப்பட்டோருக்கு தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளையும், இரட்டை சுடுகாடும், பல்வேறு வடிவங்களில் தீண்டாமையும் பின்பற்றப்படுகிறதே; இதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் போராட்டக் களத்தில் நிற்கிறதே. 'இந்து' ஆதி திராவிடர் உரிமைக்கு இவர்கள் போராட முன் வருவார்களா?

## 'பெரியார்' படம் தெலுங்கில் 'ராமசாமி நாயக்கர்' ஆனது!




'திருவாளர் 15 லட்சம்' (கி.வீரமணி) நடத்தும் 'லிபர்ட்டி கிரியேஷன்ஸ்' தமிழில் உருவாக்கிய 'பெரியார்' படம், இப்போது தெலுங்கிலும் மொழி மாற்றம் செய்யப்பட் டுள்ளது. இதற்கான அனுமதியை 'திருவாளர் 15 லட்சம்' நடத்தும் 'லிபர்ட்டி கிரியேஷன்ஸ்'தான் வழங்கியிருக்கிறது.

தெலுங்கில் 'பெரியார்' படத்துக்கு பெயர் என்ன தெரியுமா?

"பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கர்"

'விடுதலை' நாளேட்டிலேயே - தெலுங்கு மொழியில் - இந்தத் தலைப்பை அவர்களே படத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், செய்தியில் 'பெரியார்' படம் என்று குறிப்பிட்டுள்ளார்களே தவிர, சாதி 'வாலை' யும் ஒட்ட வைத்து பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதை மறைத்து விட்டார்கள்.

இந்த தெலுங்கு படத்தின் அறிமுக விழா வுக்கு, 'திருவாளர் 15 லட்சமும்' கலந்து கொள்கிறாராம்.

சரி; இப்போது 'விடுதலை'க்கு ஒரு கேள்வி! பெரியார் நூல்களை தங்களைத் தவிர வேறு எவரும் வெளியிடக் கூடாது என்று - நீதிமன்றம் வரை போய் மூக்குடை பட்டு நிற்கும் இவர்கள், அதற்காக முன் வைத்த வலிமையான வாதம் என்ன தெரியுமா? சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர்' நூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட ஒரு நிறுவனம், 'தமிழர் தலைவர்' என்ற பெயரை மாற்றி 'ராமசாமி நாயக்கர்' என்று பெயர் சூட்டிவிட்டதாம்! வெளியீட்டு உரிமை தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தால், வாழ்நாள் முழுதும் சாதி ஒழிப்புக்காகப் போராடிய பெரியார் பெயருக்குப் பின்னால், இப்படி சாதி போடுகிற கேவலம் நடந்திருக்குமா, என்று 'விடுதலை' கேட்டது!

அப்படி எழுதிய "பத்தரை மாற்றுக் கொள்கைத் தங்கங்கள்" தான் இப்போது தங்கள் உரிமைகளின் கீழ் உள்ள பெரியார் படத்தை ஆந்திர சந்தையில் விற்று காசாக்க - பெரியாரை 'ராமசாமி நாயக்கர்' என்று பெயர் மாற்ற அனுமதித்திருக்கிறார்கள்.

'விடுதலை' எழுத்தாளர்களே! இதற்கு என்ன பதிலை கூறப் போகிறீர்கள்?

"ஆந்திராவில், 'நாயக்கர்' என்று போட்டால் தானே படத்தை ஓட்ட முடியும். அந்த சூட்சமத்தைப் புரிந்த காரணத்தால்தான் தமிழர் தலைவர், இப்படி அருமையான முடிவை எடுத்திருக்கிறார்கள்! இது தமிழர் தலைவரைத் தவிர வேறு எவரால் முடியும்?" என்று விளக்கவுரை எழுதுவீர்களோ?

அய்யோ பாவம்!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்:
✆ 99416 13535

## ‘காந்தி விருது’ பெற்ற ஊராட்சியில் தலித் மக்களுக்கு குடிநீர் மறுப்பு

## ஒட்டன் சத்திரம் பகுதி தீண்டாமை அவலங்கள்

***ஒட்டன் சத்திரம் பகுதியில் நிலவும் தீண்டாமை அவலங்கள் பற்றி, ஏற்கனவே இரண்டு பட்டியல்களை வெளியிட்டுள்ளோம். இது 3வது பட்டியல்:***

1. *கீரனூர் - கள்ளிமந்தயம் - ராசேந்திரன் தேநீர் கடை, அருள் தேநீர் கடை, அகத்தியர் தேநீர் கடை - இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், மல்லீசுவரன், காளியம்மன், விநாயகர் கோவில்களில் தலித்துகள் அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு. (அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் கட்டப்பட்டது.)*

   *இந்த ஊரில் தான் சமீபத்தில் தெருவிளக்கு எரியவில்லை என ஊராட்சி மன்ற தலைவரிடம் கேட்ட அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திவிட்டு, ஊர் கட்டுப்பாடு என்ற பெயரில் தலித் அருந்ததியர் இன மக்களுக்கு குடிநீர் மறுக்கப்பட்டு மூன்று மாத காலமாக சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். இந்த ஊராட்சி மன்றத் தலைவருக்குத்தான் தீண்டாமை ஒழிப்பிற்கான ‘உத்தமர் காந்தி விருது’ தமிழக அரசால் இரண்டு முறை வழங்கப்பட்டுள்ளது.*

2. *கரியாம்பட்டி - கள்ளி மந்தயம் : சின்னப்பன் தேநீர் கடை, பெரியப்பன் தேநீர் கடை, அசோகன் தேநீர் கடை, சிவா தேநீர் கடை, வீராச்சாமி தேநீர் கடை, சுரேஷ் தேநீர் கடை.*

   *இரட்டைக்குவளை, இரட்டை பெஞ்ச், இங்குள்ள மூன்று சலூன் கடைகளில் முடிவெட்டத் தடை. சுடுகாடு இரண்டு. காளியம்மன், விநாயகர் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை.*

3. *நாச்சியப்பன் கவுண்டன் வலசு - அம்பிளிக்கை - சுடுகாடு இரண்டு. மாரியம்மன், விநாயகர் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை. தலித்துகள் நடக்க பாதையே இல்லை.*

4. *சக்கம்பட்டி - அம்பிளிக்கை : நடராஜ் தேநீர் கடை, சின்ராஜ் தேநீர் கடை, கண்ணம்மாள் தேநீர் கடை, செல்லம்மாள் தேநீர் கடை. - இரட்டைக்குவளை, இரட்டை பெஞ்ச், காளியம்மன், விநாயகர் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை. இங்குள்ள கலையரங்கில் தலித்துகள் அமர அனுமதி இல்லை.*

5. *வெரியப்பூர் : பூபதி நாயுடு தேநீர் கடை, கோபால் நாயுடு தேநீர் கடை, வரதராசன் நாயுடு தேநீர் கடை - இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், ஈசுவரன் சலூனில் முடிவெட்ட தடை.*

6. *மூனூர் : தங்கவேல் தேநீர் கடை, சுப்பிரமணி தேநீர் கடை, கந்தசாமி தேநீர் கடை - இரட்டைக்குவளை, இரட்டை பெஞ்ச், பஸ் ஸ்டாப்பில் அமர அனுமதி இல்லை. காளியம்மன், விநாயகர் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை.*

7. *நாகப்பன்பட்டி : மாரியம்மன், பொடாரியம்மன் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை.*

8. *அந்திக்கோம்பை : கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளர்கள் தலித்துகள் (அருந்ததியர்கள்) என்பதால் பாயை விரித்து கீழே அமர்ந்து பணி புரிகிறார்கள்.*

**– கழகத்தின் களப்பணிக் குழு**

# சங்கராச்சாரி சொத்துகளை பறிமுதல் செய்த சாகுமகராஜ்

உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ளது “அமேதி” பாராளுமன்றத் தொகுதி. சென்ற வருடம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், அங்கு போட்டியிட்டு வெற்றி பெற்றவர் – காங்கிரஸ் கட்சியின் மிகப்பெரும் தலைவர்களில் (!?) ஒருவரான ராகுல் காந்தி ஆவார். உ.பி. முதல்வர் மாயாவதி அமேதியை ஜுலை 1, 2010 அன்று மாவட்டத் தகுதிக்கு உயர்த்தி அறிவிப்புக் கொடுத்தார். அதன்படி, அம்மாநிலத்தின் 72–ஆவது மாவட்டமானது அமேதி. ஆனால், இதுவல்ல செய்தி. அம்மாவட்டத்திற்கு சத்ரபதி சாகு மகராஜ் மாவட்டம் எனப் பெயர் சூட்டி மிகவும் பாராட்டத்தக்க செயலை செய்துள்ளார் மாயாவதி.

மராட்டிய மாநிலத்தில் பிறந்த சாகுமகராஜ் பெயரை, உ.பி.யில் உள்ள ஒரு மாவட்டத்திற்கு சூட்ட வேண்டியத் தேவை என்ன? பிற்படுத்தப்பட்ட இனத்தில் பிறந்த ஒருவரின் பெயரை, தான் ஆளும் மாநிலத்தின் ஒரு மாவட்டத்திற்கு தலித் தலைவர் செல்வி மாயாவதி இடவேண்டிய அவசியம் என்ன ? கிட்டத்தட்ட 90 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த மன்னர் ஒருவரின் பெயரை மக்களாட்சியின் ஒரு நிலப்பரப்பிற்கு தற்போது சூட்ட வேண்டிய முக்கியத்துவம் என்ன ?

இது போன்ற எண்ணற்ற வினாக்களுக்கு விடை பகர்கிறது புரட்சியாளர் சாகுமகராஜ் அவர்களின் பொது நலன் சார்ந்த வாழ்க்கை. சிற்றம்பரி என்ற இயற்பெயர் கொண்ட சாகுமகராஜ் (1874 - 1922) அவர்கள் சத்ரபதி சிவாஜியின் மரபு வழி வந்தவர். பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கு உட்பட்டு, மராட்டிய மாநிலம் கோலாப்பூர் சமஸ்தானத்தின் மன்னராக தமது 20–ஆவது வயதில் பதவியேற்று 28 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர்.

இவரது பல்வேறு சாதனைகளிலும், இவரை ஒளி வட்டத்தில் கொண்டு நிறுத்தி, மற்றவர்களின் கவனத்தை இவர்பால் ஈர்த்தது – ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இவர் அளித்த இடஒதுக்கீடே ஆகும். கோலாப்பூர் சமஸ்தானத்தில் உள்ள அனைத்துப் பணிகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்து 1902–இல் ஆணை பிறப்பித்தார். இந்தியத் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிற இன்றைய மொத்த நிலப்பரப்பிலும் இட ஒதுக்கீடு என்ற ஒன்றை முதன்முதலில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மனமுவந்து அளித்தவர் புரட்சியாளர் சாகுமகராஜ் அவர்கள் தான்.

1900 ஆண்டுகளில் யார் ஆட்சியில் இருந்தாலும், அதிகாரமய்யங்களாக இருந்தவர்கள் பார்ப்பனர்கள் தான் என்பதை சொல்லவேண்டிய அவசியமே இல்லை. தகுதி, திறமை என்று இப்போதும் திரிபு வாதம் பேசும் பார்ப்பனர்கள், 1902 – இல் சாகுமகராஜ் ஒடுக்கப்பட்டோருக்கு அளித்த இடஒதுக்கீட்டுக்கு எவ்வளவு இடையூறு செய்திருப்பார்கள் என்பதை நம்மால் உணரமுடியும். ஆனால், அத்தனை இடையூறுகளையும் புறந்தள்ளிய பெருமைக்குரியவர் சாகுமகராஜ்.

நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய டாக்டர் தரவாத் மாதவன் நாயர் (டி.எம்.நாயர்) மைசூர் சமஸ்தான மன்னராக விளங்கிய கிருஷ்ணராஜ (உடையார்), சாகுமகராஜ் – ஆகிய மூவரும் இங்கிலாந்தில் ஒரே காலத்தில் படித்தவர்கள். ஒத்தக் கருத்துடையவர்களும் கூட. படிப்பை முடித்ததும் மூவரும் தத்தமது பகுதிகளில் தங்கள் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தனர்.

சாகு மகராஜைப் பின்பற்றி 1921 – இல் தனது மைசூர் சமஸ்தானத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மன்னர் கிருஷ்ணராஜு (உடையார்) இட ஒதுக்கீடு அளித்தார். 1916 முதல் பார்ப்பனரல்லாத இயக்கத்தை முன்னின்று நடத்தினார் டாக்டர் டி.எம். நாயர். எல்லாக் காலத்திலும் தங்கள் இனத்தை காப்பற்ற அடுத்த இனத்தின் மீது ஏறி மிதிப்பது என்ற கொடூரக்கொள்கையுடைய பார்ப் பனர்கள், மைசூர் மன்னர் அளித்த இடஒதுக்கீட்டையும் எதிர்த்தனர். மைசூர் சமஸ்தானத்தின் அப்போதைய திவானாக இருந்த விசுவேசுவரய்யா என்ற பார்ப்பனர், இடஒதுக்கீடு கொள்கையை எதிர்த்துப் பதவி விலகினார். மன்னர் கிருஷ்ணராஜு (உடையார்) அதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் இடஒதுக்கீட்டை அமல்படுத்தினார்.

தொட்டால் தீட்டு ; கை பட்டால் பாவம் என்ற நிலையில் அன்று ஒதுக்கி வைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் உணவுக்கடைகளை கோலாப்பூர் சமஸ்தானத்தில் வைத்துக் கொள்ள சாகுமகராஜ் அனுமதியளித்தார். அது மட்டுமன்றி, தனது பரிவாரங்களுடன் வழக்கமாகச் அங்கே சென்று உணவருந்தி ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தார். இவர் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன் கோலாப்பூரில் ஒடுக்கப்பட்ட மக்கள் கட்டாயம் உடலுழைப்புக் கொடுக்க வேண்டும் என்ற முறை இருந்தது. சாகுமகராஜ் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த 1894 – லேயே அதை முற்றுமுழுதாக ஒழித்தார்.

அனைவருக்கும் கல்வி என்பதில் முனைப்புக் காட்டினார். ஆனால், அனைத்து சாதியினரும் ஒன்றாகத் தங்கிப் படிக்க இருந்த ஒரே ஒரு விடுதியில் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர் கூட பல ஆண்டுகளாக சேர்த்துக் கொள்ளப்படாத நிலை கண்டு வருந்தினார். எனவே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு என்று தனி விடுதியை ஏற்படுத்தி அவர்கள் படிக்க ஆவனசெய்தார். நிலைமை சற்று சீரானதும் – அரசின் கல்வி நிறுவனங்களிலும் அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களிலும் சாதியின் பெயரால் மாணவர்களிடையே பாகுபாடு (discrimination) காட்டக்கூடாது என்று அரசாணையே பிறப்பித்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டும் என்று இருந்த தனிப்பள்ளிகளை மூடிவிட்டு, பொதுப்பள்ளிகளில் அவர்களைச் சேர்க்க ஆணையிட்டார்.

சாதி அடிப்படையில் கோலாப்பூர் நகரசபைக்கு இட ஒதுக்கீடு அளித்து, தாழ்த்தப்பட்டோருக்கான இடங்களை அவர்களுக்கு அளித்தார். இவர் காலத்தில் தான் முதன் முதலில் தாழ்த்தப்பட்ட ஒருவர் கோலாப்பூர் நகரசபையின் தலைவராக ஆக்கப்பட்டார். கிராமங்களில் தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட எல்லா சாதிகளைச் சார்ந்தவர்களையும் கணக்குப்பிள்ளைகளாக (குல்கர்னிகளாக) நியமித்து ஆணையிட்டார். இதன் மூலம் கிராமங்களில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தையும், சாதிகளுக்கு இடையில் சிண்டு முடியும் குள்ளநரித்தனத்தையும் ஒடுக்கினார். உடனே, “தாழ்த்தப்பட்டவர்களுடன் நாங்கள் பணிபுரிய மாட்டோம்” என்று வருவாய்த்துறையில் பணியாற்றிய பார்ப்பனர்கள் எதிர்ப்புக்காட்டினர். அதற்கு சாகுமகராஜ், “உங்களுக்கு 15 நாட்கள் அவகாசம் கொடுக்கிறேன் ; அதற்குள் அதே பணியை அதே இடத்தில் தொடர்வதா, இல்லை பணியிலிருந்து விலகி ஓடுவதா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்” என்று அறுதியிட்டுக் கூறியது மட்டுமன்றி, தாழ்த்தப்பட்டவர்களை மேலும் செல்வாக்குள்ள பதவிகளில் அமர்த்தினார்.

சாகுமகராஜ் தன்னுடைய தனி அலுவலர்களில் தாழ்த்தப்பட்டோரையும் சேர்த்துக்கொண்டார். யானை மீது ஏறி அமர்ந்து வழிநடத்திச் செல்லும் அரசுப் பதவியை அதுவரை எந்த தாழ்த்தப்பட்டவரும் வகித்ததில்லை என்ற நிலையை மாற்றி, தாழ்த்தப்பட்ட ஒருவருக்கு அந்த அரசுப் பதவியை வழங்கினார். இவ்வாறு, சாதிப்பாகுபாடு பேணும் பிற்போக்கானவர்களின் கெடுமதியில் 19–ஆம் நூற்றாண்டிலேயே சுத்தியல் கொண்டு தாக்கினார் சாகுமகராஜ்.

சாதி அமைப்பையே தகர்க்க விரும்பி, பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க முனைப்புக் காட்டினார். அதற்கு அவர் சார்ந்த சாதியாரின் முழு ஆதரவு கிடைத்தது. அதை நன்கு பயன்படுத்திக்கொண்டார். ஆனால், தாழ்த்தப்பட்டோரின் இழிவைப் போக்க இவர் முனைந்தபோது இவரின் சொந்த சாதியைச் சேர்ந்தவர்கள் அதற்கு உடன்படவில்லை. ஆனால், தன்னுடைய குறிக்கோளில் கடைசி வரை உறுதியாக இருந்து கடமையாற்றினார் சாகுமகராஜ்.

அம்பேத்கருக்கும், சாகுமகராஜுக்கும் இடையில் நல்லத் தொடர்பு இருந்தது. 1920 ஜனவரி 31 ஆம் நாள் அம்பேத்கர் “மூக்நாயக்” (ஊமைகளின் தலைவன்) என்றொரு இதழைத் தொடங்கினார். “மூக்நாயக்” இதழ் தொடர்ந்து வெளிவர நிதி உதவி செய்தவர் சாகுமகராஜ். அம்பேத்கர் தன் ஆய்வுப் படிப்பை இங்கிலாந்தில் படித்தபோது; இடையில் அதை நிறுத்திவிட்டு இந்தியா திரும்ப வேண்டி வந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து சென்று மீண்டும் அப்படிப்பை அம்பேத்கர் தொடர உதவியவர்களில் சாகுமகராஜும் ஒருவர்.

சாகுமகராஜ் கடவுள் பற்றாளர் ; மதச்சடங்குகளில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். எனவே, அவருக்கான மதச்சடங்களை நிறைவேற்ற அரண்மனையில் பார்ப்பன புரோகிதர்கள் இருந்தனர். ஆனால், வேதச் சடங்குகளைச் செய்யாமல், புராணச் சடங்குகளை மட்டுமே செய்தனர். வேதம் என்பது இரு பிறப்பாளர்களான (துவிஜர்கள்) பார்ப்பனர்களுக்கு மட்டும் தான் என்பதால் வேதச் சடங்குகளை பார்ப்பனர்களுக்கு மட்டுமே செய்ய முடியும் என்பதில் இன்றுவரை அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். இரு பிறப்பாளர்கள் என்பது, ஒரு பார்ப்பான் குழந்தையாகப் பிறக்கும் போது முதல் பிறப்பு ; பூணூல் அணியும் போது இரண்டாவது பிறப்பு.

*(4 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அக்.2 போராட்டம்; பெருமளவில் பங்கேற்க சென்னை மாவட்டக் கழகம் தீவிரம்



பெரியார் திராவிடர் கழக சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 5.8.2010 வியாழன் மாலை 7 மணியளவில் பச்சையப்பன் கல்லூரி பின்புறமுள்ள மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடியது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமாரதேவன், தென் சென்னை, வட சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உரையாற்றினர். அக்டோபர் 2 ஆம் தேதி நடக்கவிருக்கும் சாதி தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தில் தோழர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்பது என முடிவு செய்யப் பட்டது.

போராட்டத்தை விளக்கி சுவரெழுத்து, துண்டறிக்கை வழியாக தீவிரமாக பரப்புரை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. வட சென்னை, தென் சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களில் சில மாற்றங்கள் செய்யப் பட்டன.

தென் சென்னை மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் : தலைவர் - தபசி. குமரன்; துணைத் தலைவர் - பா. இராசன்; செயலாளர் - இரா. உமாபதி; துணைச் செயலாளர் - ச. குமரன்; பொருளாளர் - கரு. அண்ணாமலை; ஒருங்கிணைப்பாளர் - சுகுமாறன்.

வட சென்னை மாவட்டம் : தலைவர் - எ. கேசவன்; துணைத் தலைவர் - ஏசு; செயலாளர் - சொ. அன்பு; துணை செயலாளர் - சி. பாஸ்கர்; ஒருங்கிணைப்பாளர் - தட்சிணாமூர்த்தி; பொருளாளர் - நா. பாஸ்கர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் மாட்டுக் கறி பிரியாணி உணவு வழங்கப்பட்டது. கூட்டத்துக்கான ஏற்பாடுகளை உணவையும் சேத்துப்பட்டு பகுதி தோழர்கள் வேலு, சரவணன், ராஜன் சிறப்பாக செய்திருந்தனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்ரபதி சிவாஜியின் வழியில் வந்த சாகுமகராஜ் சத்திரியராகவே (போர் செய்யும் தொழிலைச் செய்பவர்கள்) இருந்தாலும், அவரை சூத்திரராகவே கருதி தான் கோலாப்பூர் அரண்மனையில் வேதச்சடங்குகள் செய்யப்படாமல், வெறும் புராணச் சடங்குகளை மட்டுமே பார்ப்பனர்கள் செய்தனர். தன் மானம் கொண்ட சாகுமகராஜ் இதை அறிந்ததும், தனக்கு ஏற்பட்ட இழிவை அடியோடு ஒழிக்க முற்பட்டு, 'இனி அரண்மனையில் புரோகிதர்கள் வேதச்சடங்குகளை மட்டுமே செய்யவேண்டும் ; புராணச் சடங்குகளை செய்யக் கூடாது; அப்படி மீறுபவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்' என்றொரு அறிவிப்பைக் கொடுத்தார்.

அரண்மனைத் தலைமை புரோகிதர் ராஜோபாத்தியாயா, அந்த உத்தரவை செயல்படுத்த மறுத்தார். உடனடியாக, அவரைப் பணி நீக்கம் செய்து, அவருக்கு தானமாக கொடுக்கப்பட்ட நிலத்தையும் பிடுங்கினார் சாகுமகராஜ். தலைமைப் புரோகிதர் மறுத்தது சரிதான் என்று கோலாப்பூரில் இருந்த சங்க(ட)ர மடத்தின் சங்கராச்சாரி பிலவதிகர் என்பவரும் கூறினார். சினம் கொண்ட சாகுமகராஜ், கோலாப்பூர் சங்கரமடம் பற்றிய செய்திகளை தோண்டித் துருவினார். இவரின் காலத்திற்கு முன்பு 1863 இல் அன்றைய மன்னர் பெருமளவிலான சொத்துகளை அந்த சங்கர மடத்திற்கு கொடுத்தது அப்போது தெரிய வந்தது.

ஒரு நிபந்தனையுடன் தான் அந்தச் சொத்துக்கள் கொடுக்கப்பட்டன. சங்கர மடத்தின் வாரிசை (ஜுனியர்) நியமிக்கும் முன், மன்னரின் ஒப்புதலைப் பெற்றே நியமிக்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. சங்கராச்சாரி பிலவதிகர், மன்னர் சாகுமகராஜின் ஒப்புதலைப் பெறாமலே தனக்கான வாரிசை நியமித்ததை அறிந்தவுடன், சங்கராச்சாரியின் சொத்துக்களைக் கைப்பற்றினார் ; வாரிசு நியமனத்தையும் செல்லாது என அறிவித்தார். சொத்தை திரும்பப்பெற்று, மீண்டும் அதை அனுபவிக்கும் ஆசையில் – சீனியர், ஜுனியர் சங்கராச்சாரிகள் போட்டி போட்டுக்கொண்டு செயல்படத்தொடங்கினர். (போலி காஞ்சி சங்கரமடத்தின் பெரியவா, சின்னவா இடையே சொத்து மட்டுமின்றி, பெண்களுக்காகவும் வெளிப்படையாக அடித்துக்கொண்டு நாறியதை அண்மைக்காலத்தில் நாம் நேரடியாகக் கண்டோம்.)

கடைசியில், சாகுமகராஜுக்கு பூணூல் அணிவிக்கவும், வேதச்சடங்குள் செய்யவும் சொத்தை அனுபவிக்கும் ஆசையில் ஜுனியர் சங்கராச்சாரி உடன்பட்டு, இழந்த சொத்துக்களைத் திரும்பப்பெற்றார்.

நடிகர் வடிவேலு நடித்த ஒரு திரைப்படத்தில் வரும் நகைச்சுவைக் காட்சியில், வத்தக்குழம்பை கூரியர் மூலம் அனுப்ப வந்த பார்ப்பனரின் பார்சல் சேதம் ஆகும். இதற்கு 'நான் சுப்ரீம் கோர்ட் போவேன்' என்று அந்த பார்ப்பனர் கூறுவதாக அக்காட்சி இருக்கும். வத்தக்குழம்புக்கே சுப்ரீம் கோர்ட் போவதாகக் கூறும் போது, சொத்துக் கணக்கு இல்லை என்றால் சீனியர் சங்கராச்சாரி விடுவாரா என்ன ? கோலாப்பூரில் அன்று இருந்த ஆங்கில அரசின் அரசியல் முகவர் கர்னல் ஃபெரிஸ், பம்பாய் அரசு, இந்திய அரசு என படிப்படியாக மேலே சென்று முறையிட்டார் சீனியர் சங்கராச்சாரி பிலவதிகர்.

அய்யோ பாவம் ! கடைசி வரை அவரால் வெற்றி பெறவே முடியவில்லை.

சத்ரபதி சிவாஜிக்கு பூணூல் அணிவிக்கவும், வேதச் சடங்குகள் செய்யவும் மறுத்து அவர் மன்னராக முடிசூட பெரும் சிக்கலை பார்ப்பன புரோகிதர்கள் இதற்கு முன்பு ஏற்படுத்தினர். புரோகிதர்களுக்கு கோடி கோடியாக கொட்டிக்கொடுத்து தான் 1674 – இல் சத்ரபதி என்ற பட்டத்துடன் சிவாஜி முடி சூட்டிக்கொள்ள முடிந்தது. ஆனால், சிவாஜி மரபில் வந்த சாகுமகராஜ், புரோகிதர்களுக்குக் கொட்டிக் கொடுக்காமல் அவர்களை சுற்றிச் சுற்றி அடித்தே தனது உரிமையை நிலை நாட்டினார். 'பார்ப்பான் கெஞ்சினால் மிஞ்சுவான் ; மிஞ்சினால் கெஞ்சுவான்' என்ற சொற்றொடருக்கு அன்றே ஒரு முன் மாதிரியை நிலை நாட்டினார் சாகுமகராஜ்.

இந்த நிகழ்வுக்குப் பிறகு மெச்சத்தக்க இரு செயல்களைச் செய்தார் சாகுமகராஜ். பார்ப்பனர்களை அழைக்காமல் திருமணம், சடங்கு போன்றவைகளை நடத்தவேண்டும் என்பதில் தனது கவனத்தைக் குவித்தார். 1920 –இல் பார்ப்பனரல்லாத மராத்திகளை அர்ச்சகர்களாக உருவாக்க ஒரு வேதப்பள்ளியை நிறுவினார். கோயில்களைச் சுரண்டும் பார்ப்பனர்களுக்கு ஆப்பு வைக்கும் விதமாக 'தேவஸ்தான இனாம் துறை' ஒன்றை நிறுவி அதை வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் கொணர்ந்தார். அதன்படி, கோயிலின் வருமானத்தை கல்விக்காக திருப்பிவிட்டார். இதைப் பின்பற்றித்தான் 1925–இல் நீதிக்கட்சி சென்னை மாகாணத்தில் இந்து அறநிலையத்துறையை ஏற்படுத்தியது.

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையில், பார்ப்பனர் எதிர்ப்பில் மிகச் சரியாக செயல்பட்ட சாகுமகராஜின் பெயரைத்தான் உத்திர பிரதேசத்தில் உள்ள அமேதி மாவட்டத்திற்கு பெயரிட்டு தன்னையே பெருமைப்படுத்திக் கொண்டார் மாயாவதி.

**– மேட்டூர் ஜஸ்டின் ராஜ்**

## வடசென்னையில் காமராசர் பிறந்த நாள்

15.7.2010 வியாழன் மாலை 7 மணியளவில் புதுவண்ணை எ.ஈ. கோயில் தெருவில் வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் காமராசர் பிறந்த நாள் பொதுக் கூட்டம் ஞா. டார்வின்தாசன் தலைமையில் சிறப்புடன் நடந்தது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழக வழக்கறிஞர் குமாரதேவன் சிறப்புரையாற்றினர். டி. ரவிச்சந்திரன் வரவேற்க, சந்திரசேகர், சீனிவாசன், சத்யா, தனசேகர் முன்னிலை வகித்தனர். சொ. அன்பு, செ. தமிழ்ச்செல்வன் உரையாற்றினர். சி.அருள்தாசு இன எழுச்சிப் பாடல்களை பாடினார்.

கி. வீரமணியின் காரை உடைத்ததாக காவல் துறையால் போடப்பட்ட பொய் வழக்கிலிருந்து பிணையில் விடுதலையடைந்த தோழர்கள் தமிழ்ச் செல்வன், கணேஷ், சசிக்குமார், ஜெய்குமார் ஆகியோருக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் கைத்தறி ஆடை அணிவித்து சிறப்புச் செய்தார்.

புது வண்ணை கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பொதுக் கூட்டத்தில் கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள், பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

### நன்கொடை

கிருட்டிணகிரி மாவட்டம் பாண்டவர் குட்டை கழகத் தோழர் ப.க. சுப்பிரமணியம், எம்.ஏ., எம்.பில்., பி.எட்., - பேராசிரியர் எம். கல்பனா, எம்.எஸ்சி., எம்.பில்., இணையருக்கு 26.4.2010 அன்று ஆண் மகவு பிறந்தது. அதன் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளனர். இவர்கள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மணவிழாவை நடத்திக் கொண்டவர்கள்.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்புக் காவல் பிரிவு அலுவலகத்தை பூட்டும் போராட்டம் கழகம் அறிவித்திருப்பதையும் விரிவாக பேசினார்.


பென்னாகரம் ஒன்றிய பெரியார் தி.க. சார்பாக ஏற்பாடு செய்த இப்பொதுக் கூட்டத்தில் தோழர்கள் நஞ்சப்பன், கு. நாகராசு, சி.மாது, கே.இளங்கோவன், டி.ராசு, செந்தில், அசோக் குமரன், தேவன், புலவர் கு.பரமசிவம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தோழர்கள் பழனி, குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**செய்தி: கோகுல் கண்ணன்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th August 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஆகஸ்டு 19, 2010 | புரட்சி 9 | முழக்கம் 32 | விலை: ரூ.2.50


பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் பொள்ளாச்சியில் ஆர்ப்பாட்டம்

## மலையாளிகளின் குப்பைத் தொட்டியா தமிழ்நாடு?

கேரளாவிலிருந்து மருத்துவக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள், வேதியல் கழிவுகள் அனைத்தையும் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வந்து தமிழக வேளாண் நிலங்களிலும், ஏரி, குளம், வாய்க்கால் போன்ற நீர் நிலைகளிலும், சாலை யோரங்களிலும் திருட்டுத்தனமாய் கொட்டிப் போகிறார்கள். இதனால் விவசாய நிலங்கள் அமிலத் தன்மையடைந்து பயிர் செய்ய முடியாதபடி பாழ்பட்டு வருகின்றன.

நீர் நிலைகளில் கலக்கும் கழிவுகளால் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பெயர் தெரியாத பல தொற்று நோய்கள் பரவுகின்றன. இயற்கையும், சுற்றுச் சூழலும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இந்தக் கழிவுகளை தமிழ்நாட்டிற்குள் கடத்திக் கொண்டு வருவதற்கு பொள்ளாச்சி சுற்றுப் பகுதியைச் சேர்ந்த அரசியல் கட்சி பிரமுகர்களும், ஒரு சில லாரி உரிமையாளர் - ஓட்டுனர்களுமே பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு தமிழக காவல்துறையும், வருவாய் துறையும் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கிறார்கள். இப்படி தமிழக வளங்களை அழிக்கும் நாசகாரப் பணிக்கு துணையாக தமிழக அதிகாரிகளும், சமூக விரோதிகளுமே முன் நின்று மலையாளிகளுக்குத் துணை போகிறார்கள்.

தமிழர்களுக்கு எதிரான மலையாளிகளின் இந்த அத்துமீறலை கண்டித்து பல ஆண்டுகளாக பொள்ளாச்சி பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து எதிர்த்தும், தடுத்தும் போராடி வருகிறது. இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு கழகத் தோழர்களால் நள்ளிரவில் விரட்டி யடிக்கப்பட்ட கேரள மருத்துவக் கழிவு லாரி ஒன்று மீண்டும் கடந்த 8.7.2010 அன்று மாலை மருத்துவக் கழிவுகளுடன் பொள்ளாச்சியை நோக்கி வந்திருக்கிறது. கழகத் தோழர்கள் பொள்ளாச்சி எல்லையில் அந்த லாரியை மடக்கிப் பிடித்து செய்தியாளர்கள் முன்னிலையில் காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கழிவு லாரியை ஓட்டி வந்தவர்கள் மீது சாதாரண பிரிவுகளில் வழக்கைப் பதிவு செய்த பொள்ளாச்சி காவல்துறை லாரியை பிடித்துக் கொடுத்த கழகத் தோழர் காசு. நாகராசன் மீது பிணையில் வெளிவர முடியாத பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து மறுநாள் அதிகாலையில் அவரது வீட்டிற்கே போய் கைது செய்துவிட்டனர். இந்தச் சேதியறிந்த பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் வ.செயராமன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருடன் பேசி கைது செய்யப்பட்டுள்ள நாகராசனை விடுவிக்குமாறு கோரியுள்ளார். அதிகாரி மறுத்துள்ளார். உடனே, சட்டமன்ற உறுப்பினர் வ. செயராமன், பெரியார் திராவிடர் கழகத் தோழர்களின் சமூகப் பணிகளைத் தடுத்து காவல்துறை சட்டவிரோதமாக செயல்படுவதைக் கண்டித்து தானே மறியல் செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளார். தொடர்ந்து கழகத் தோழர்களும், அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த தோழர்களும் காவல் நிலையம் முன் குவிந்துள்ளனர். உடனே மதியம் வாக்கில் நாகராசனை விடுவித்த காவல் துறையினர். வழக்கில் "யாரோ ஒரு அடையாளம் தெரியாத பெரியார் திராவிடர் கழக கட்சியைச் சேர்ந்தவர்" கழிவு லாரியைத் தாக்கியதாக ஒரு புகாரை லாரி கிளீனர் பேரால் பதிந்து முதல் தகவல் அறிக்கையும் தயாரித்து வைத்துக் கொண்டு கழகத் தோழர்களைத் தொடர்ந்து நெருக்கிக் கொண்டுள்ளனர்.

இது போதாதென்று வனவிலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும் கேரள தெரு நாய்களைப் பிடித்து வந்து வனப் பகதிகளுக்குள் கேரள வனத்துறையினரே விட்டுச் சென்றுள்ளனர். மலையாள வன அதிகாரிகளை கையும் களவுமாக பிடித்தும்கூட அவர்கள் மீது எந்த ஒரு வழக்கும் பதியாமல் அவர்களை பாதுகாப்பாக கேரளாவுக்கு அனுப்பியுள்ளனர் தமிழக காவல்துறையும், வனத் துறையும்.

இதற்கிடையே, லாரியில் வந்த கழிவு "பேரபாயம் தரக்கூடியதல்ல" என்கிற ஆராய்ச்சி(?) முடிவுப்படி லாரியை விடுவிப்பதாக பொள்ளாச்சி நீதிமன்றமும் தன் பங்கிற்கு மலையாளிகளைப் பாதுகாத்து லாரியை பத்திரமாகத் திருப்பித்தர உத்தரவிட்டு லாரியும் போய்விட்டது. ஆனால், கழகத் தோழர்கள் மீதான வழக்கு மட்டும் பத்திரமாய் இருக்கிறது.

மருத்துவக் கழிவோ, ஆபத்து தரக்கூடியதோ, தராததோ எதுவாக இருந்தாலும் மலையாளிகளின் கழிவைக் கொண்டு வந்து கொட்டுவதற்கு தமிழ் நாடென்ன குப்பைத் தொட்டியா? என்கிற கேள்விகளோடு பொள்ளாச்சி பகுதியில் களம் இறங்கியுள்ள கழகத் தோழர்கள் கடந்த 10.8.2010 அன்று தமிழக கேரள எல்லையோரங்களில் மலையாளிகளின் அத்துமீறல்களைக் கண்டித்து தெருமுனைக் கூட்டங்களை நடத்தி தமிழக விவசாயிகளையும், சமூக ஆர்வலர்களையும் அணி திரட்டும் பரப்புகளை நிகழ்த்தினர். இந்தக் கூட்டங்களில் திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு. துரைசாமி, பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் இரா. மோகன், சி. விசயராகவன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

தொடர்ந்து 13.8.2010 அன்று பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி, வட்ட செயலாளர் காசு. நாகராசன், ம.தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் சரவணன், ஆதித் தமிழர் பேரவை செயலாளர் கோபால், திருப்பூர் மாநகர கழக செயலாளர் முகில்ராசு, மாவட்ட கழகத் தலைவர் சு. துரைசாமி ஆகியோர் உரைக்குப்பின் கழக பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் கண்டன உரையாற்றினார்.

அப்போது, "கேரள கழிவுகளை முற்றாய் தடுத்து தமிழக வளங்களைப் பாதுகாக்கும் பணியை சட்டப்படி மேற்கொள்ளாமல் இனியும் தமிழக அரசின் காவல்துறை மலையாளிகளுக்கு சாதகமாக செயல்படுமென்றால் தமிழ்நாட்டு விவசாயிகளையும், இயற்கை ஆர்வலர்களையும் அணி திரட்டி பெரியார் திராவிடர் கழகத்தினரே முன்னின்று மலையாளிகளின் அத்துமீறல்களை எதிர்கொள்ள நேரடியாக களம் இறங்குவோம் என்று பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன் எச்சரிக்கை விடுத்தார். தொடர்ந்து ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் நன்றி கூறினார்.

கோவை மாநகர செயலாளர் வே.கோபால், கோவை நாகராசு, திருப்பூர் அகிலன், காங்கயம் பாண்டியன், பொள்ளாச்சி நகர துணைச் செயலாளர்கள் இராசேந்திரன், கலை இராசேந்திரன், வடக்கு ஒன்றிய பொறுப்பாளர்கள் சீனிவாசன், சரவணன், தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் கண்ணன், ஆனைமலை நகர செயலாளர் வே. அரிதாசு, மணிமொழி, அப்பாதுரை, பேச்சிமுத்து, கதிர், காகபுதூர் அமைப்பாளர்கள் பழமாரிமுத்து, த. மணி, ஆத்துப் பொள்ளாச்சி அமைப்பாளர் பேச்சிமுத்து, சேத்துமடை அமைப்பாளர் உத்திர ராசு மற்றும் மாணவர்கள் சதீசு, சரவணக்குமார், சிலம்பரசன், பிரதாப், ராகுல், பிரபாகரன், இரா.பிரசாத் உள்ளிட்ட 70-க்கும் மேற்பட்ட தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

செய்தி: ஆ. இரமேசு

### கருத்துரிமைக்கு எதிரான அடக்குமுறை
### கழகத் தலைவர் உட்பட 55 தோழர்கள் வேலூர் சிறையில்!

காஷ்மீர் மக்கள் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்தக் கோரி, உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கடந்த 13 ஆம் தேதி சென்னையில் பனகல் மாளிகை வாயிலில் ஆர்ப்பாட்டம் அறிவித்திருந்தது. அனுமதி மறுத்த காவல்துறை, காஷ்மீர் பிரச்னை தீர்வு நோக்கி வரும் நிலையில், ஆர்ப்பாட்டம் பிரச்னையை சிக்கலாக்கிவிடும் என்று கூறி அனுமதி மறுத்தது. தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தச் சென்ற தோழர்களை காவல்துறை கைது செய்து, ரிமாண்ட் செய்து, வேலூர் சிறைக்குக் கொண்டு போனது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வழக்கறிஞர் ரஜினிகாந்த், சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, தபசி. குமரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் மற்றும் தோழமை அமைப்பினர் 55 பேர் கைதானார்கள்.

கைதானவர்களில் 7 பேர் பெண்கள்; பெண்கள் மட்டும் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 5 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு செவ்வாய்க் கிழமை சைதை பெருநகர நீதிமன்றத்தில் அனைவருக்கும், நாள்தோறும், காவல்நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையோடு பிணை வழங்கப்பட்டது. ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கே ரிமாண்ட், வேலூரில் சிறை, நிபந்தனை பிணை என்று அனுகுமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது கலைஞர் கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி! பார்ப்பன ஜெயலலிதா ஆட்சியையே மிஞ்சிவிட்டது!

# அக்.2 கிளர்ச்சிக்கு தோழர்கள் தயாராகிறார்கள்!

கரூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்பு:

14..8.2010 சனிக்கிழமை காலை 11 மணிக்கு கரூர் ராக்பீட் நடனப் பள்ளியில் கரூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தி.தாமரைக் கண்ணன் முதலில் கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி பேசினார். தொடர்ந்து தோழர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

இறுதியாக உரையாற்றிய விடுதலை இராசேந்திரன், அடிக்கடி கலந்துரையாடல் கூட்டம் நடத்தாமல் போனதுதான் தொய்விற்குக் காரணம். அடிக்கடி சந்திக்கும் பகுதிகள் எல்லாமே சிறப்பாக செயல்படுகின்றது. எனவே நீங்களும் அடிக்கடி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடத்துங்கள், சந்தித்துக் கொண்டு இருந்தாலேகூட சிறப்பாக செயல்பட முடியும். பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் முக்கியமான போராட்டம் (அக்டோபர் 2) இது. 1925 முதல் பெரியார் எதற்காக போராடினாரோ, அந்தப் பிரச்சினைகள் அப்படியே இருக்கிறது. இந்த தீண்டாமை பிரச்சினைகளை கண்டும் காணாமல் விட முடியாது. மற்ற அரசியல் கட்சிகளோ, தாழ்த்தப்பட்ட அமைப்புகளோ கூட ஒதுங்கி நிற்கிற இந்த சூழலில், நாம் இப்பிரச்சினையை கையில் எடுப்பது அவசியம். எனவே, இப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த ஒத்துழையுங்கள் என்று கூறினார். சுவரெழுத்து, துண்டறிக்கை பிரச்சாரம் மூலம் போராட் டத்திற்கு ஆதரவு திரட்டுமாறும் பேசினார்.

கீழ்க்கண்டவர்கள் கரூர் மாவட்டப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

கரூர் - மாவட்டத் தலைவர் - கு.கி. தனபால், செயலாளர் க. முருகேசன், அமைப்பாளர் கு. இராசா, பொருளாளர் முகமது அலி.

கரூர் - நகர அமைப்பாளர் ஓட்டுநர் வேலன், இனாம் நகர அமைப்பாளர் வெ. சரவணன், தாந்தோனி நகர அமைப்பாளர் ஆ. கந்தசாமி.

கரூர் ஒன்றிய அமைப்பாளர் சோமூர் முருகேசன், அரவை ஒன்றிய அமைப்பாளர் டி. தங்கவேல், கிருஷ்ணராயபுரம் ஒன்றிய அமைப்பாளர் இரா. காமராசு, பரமத்தி ஒன்றிய தலைவர் ராமஜெயம், பரமத்தி ஒன்றிய செயலாளர் சண்முகம். மாணவர் கழக அமைப்பாளர் ப .பாலமுருகன்.

### திருச்சிராப்பள்ளி

14.8.2010 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட பெரியார் திராவிடர் கழக ஆலோசனைக் கூட்டம், திருச்சி இந்து மாடர்ன் லாட்ஜில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை க. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திருச்சி மாவட்டத் தலைவர் செ.த. ராசேந்திரன், செயலாளர் மனோகரன், பொருளாளர் புதியவன், அமைப்பாளர் ஆரோக்யசாமி, குமார், பழனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தீண்டாமை சுவர் பற்றி சுவரெழுத்து எழுதி இருப்பதால், சம்பந்தப்பட்டவர்கள் எங்கள் சுவரை பெரியார் திராவிடர் கழகத்தினர் உடைக்கப் போகிறார்கள்; நடவடிக்கை எடுங்கள் எனக் காவல்துறையில் புகார் செய்துள்ளதையும், காவல் துறையினர் தோழர்களை விசாரித்தையும் இப்போது இந்தப் போராட்டத்திற்கு கிடைத்து வரும் ஆதரவு பற்றியும், போராட்ட ஆதரவை மேலும் தீவிரப்படுத்துவது பற்றியும் விரிவாக பேசப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார் பெருந்தொண்டர் குப்புசாமி மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப் பட்டது.

தீண்டாமை ஒழிப்புப் பற்றி சுவரெழுத்துப் பிரச்சாரம், தெருமுனைப் பிரச்சாரம், துண்டறிக்கைப் பிரச்சாரம் மூலம் தீவிரப்படுத்த முடிவு செய்யப் பட்டது.

உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்பு கூட்டமைப்பு காஷ்மீர் பிரச்சினைக்காக போராட்டம் நடத்தியதற்காக, கழகத் தலைவர் உள்பட 55 தோழர்களை கைது செய்த தி.மு.க. அரசை இக்கூட்டம் கண்டிக்கிறது.

பெரியார் பிறந்த நாளான செப்.17-ல் சாதி ஒழிப்பிற்காக உயிர்த் தியாகம் செய்த மணல் மேடு வெள்ளைச்சாமி, பட்டுக்கோட்டை இராமசாமி ஆகியோரின் நினைவிடத்தில் (திருச்சி ஓயாமாரி இடுகாடு) சாதி தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி எடுத்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

### திண்டுக்கல்லில் கலந்துரையாடல்

15.8.2010 அன்று மாலை 5 மணிக்கு திண்டுக்கல் சகாய மாதா மக்கள் மன்றம் அரங்கில் மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன் முன்னிலை வகித்தார். கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

பழனி - ஒன்றியத் தலைவர் மா. முருகன், துணைத் தலைவர் பொ. பெரியசாமி, செயலாளர் சி. கருப்புச்சாமி, துணைச் செயலாளர் பெ. குணசேகரன், அமைப்பாளர் அ. இளங்கோவன், துணை அமைப்பாளர் க. மகுடீஸ்வரன், பழனி நகர அமைப்பாளர் சேது. கோபிநாத்.

### மதுரை

மதுரை மாவட்டம், இனி மதுரை மாநகர், மதுரை புறநகர் மாவட்டம் என இரண்டு பகுதியாக செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டது. அக்டோபர் 2-ல் திருச்சியில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டத்திற்கு பெருந்திரளாக கலந்து கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

மதுரை மாநகர - தலைவர் அ. பெரியசாமி, செயலாளர் பி. விடுதலை சேகர், அமைப்பாளர் மு. தமிழ்ப்பித்தன், பொருளாளர் ஆ. முருகேசன்.

மதுரை புற நகர் மாவட்ட தலைவர் மா. மாயாண்டி, செயலாளர் லெ. குமரேசன்.

**– கோகுல கண்ணன்**

# “காஷ்மீரைப் பற்றி சைதாப்பேட்டையில் பேசாதே!”

காஷ்மீர் மாநிலத்தின் சுதந்திர நாள் விழாவில் அம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா கொடியேற்ற வந்தபோது, (இது தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி வாங்கித் தந்த உரிமையாக்கும்!) அவர் மீது பார்வையாளர் வரிசையில் அமர்ந்த ஒருவர் ‘செருப்பை’ எடுத்து வீசி விட்டார்!

“எங்களுக்கு எங்கே சுதந்திரம்?” என்று செருப்பை வீசியவர் கேட்டுள்ளார். முதல்வர் உமர் அப்துல்லாவோ, ‘கல்லால் அடிப்பதைவிட செருப்பால் அடிப்பது எவ்வளவோ சிறந்தது” என்று பதில் கூறியிருக்கிறார். காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து, மக்களை வீட்டுக்குள்ளே அடைத்து வைத்து “சுதந்திர நாளை” “சுதந்திரமாக” அரசு கொண்டாடியிருக்கிறது.

செருப்பு வீச்சோடு தேசியக் கொடி ஏற்றம் காஷ்மீரில் நடந்தது என்றால், தமிழ்நாட்டில் காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசவே தடை! காஷ்மீர் மக்கள் மீது ராணுவத் தாக்குதலை நிறுத்து என்று ஆர்ப்பாட்டம் நடத்தவும் தடை!

உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு, காஷ்மீர் மக்கள் மீதான ராணுவத் தாக்குதலை நிறுத்தக் கோரி ஆகஸ்ட் 13 ஆம் தேதி சென்னையில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடத்த இருந்த ஆர்ப்பாட்டத்துக்கு காவல்துறை தடை போட்டது.

வழக்கமாக சட்டம் ஒழுங்கு பாதிக்கும் என்ற காரணத்தைக் கூறும் காவல்துறை, இப்போது, நாட்டின் அரசியல் பிரச்சினைகளையெல்லாம் காட்டி தடை போடத் தொடங்கியிருக்கிறது. “காஷ்மீர் பிரச்னை தீர்வுக்கு வந்து கொண்டிருக்கிறது; எனவே, சென்னை சைதாப்பேட்டையில் பனகல் மாளிகை அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினால், காஷ்மீர் பிரச்னை சிக்கலாக்கி விடும்” என்று கூறி அனுமதி மறுத்துள்ளது, “தேசபக்தி” மிக்க காவல்துறை.

இனிமேல் காவல்துறையிடம் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி கேட்கும் அமைப்புகள், அதற்கு முன் காவல்துறையிடம் அரசியல் கருத்துகளைக் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்வது நல்லது என்றே நினைக்கிறோம்.

மணிப்பூர் பிரச்னை பற்றி மயிலாப்பூர் ஆய்வாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அய்.எம்.எப். மேலாதிக்கம் பற்றி ஏதேனும் போராட்டம் நடத்தினால், அயனாவரம் காவல்துறை ஆய்வாளர், அது நடத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பதற்கான காரணங்களை புட்டுபுட்டு வைத்து விடுவார். பெட்ரோல் விலை உயர்வுக்கு ஆர்ப்பாட்டம் நடத்தும் முன்பு, பெரம்பூர் காவல்துறையிடம் ஆலோசனை கேட்டு தெளிவு பெறலாம். அவ்வளவு அரசியல் தெளிவு காவல்துறையிடம் மண்டி கிடக்கிறது.

காவல்துறையை இப்படி அரசியல் மயமாக்கி வைத்திருப்பதுகூட தமிழ் நாட்டில் நடக்கும் தி.மு.க. ஆட்சியின் மற்றொரு ‘இலவச’ சாதனைதான்!

இப்போதெல்லாம் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி கேட்டால்கூட, “எந்தப் பிரச்சினைப் பற்றி பேசப் போகிறீர்கள்?” என்று காவல்துறையினர் கேட்கத் தொடங்கி விட்டனர். அந்த அளவுக்கு அரசியல் தெளிவு பெற்றவர்களைக் கொண்டு தமிழக காவல்துறை செம்மையாக செயல்பட்டு வருவதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் “குடும்ப விவகாரங்களை” முன் வைத்து, சவால், எதிர் சவால் விட்டுக் கொண்டு, “அரசியல் சிந்தனைகளை” வளர்த்து வரும்போது, “காஷ்மீர் பிரச்னை” போன்றவற்றை எல்லாம் மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வந்து, தமிழகத்தின் அரசியல் தரத்தை சீர்குலைக்கலாமா? என்று தி.மு.க. ஆட்சியும், அவர்களின் காவல்துறையும் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் போலும்!

கலைஞர் கருணாநிதி ‘உடன்பிறப்புக்கு’ இப்படிகூட எழுதலாம்: “காஷ்மீர் மக்கள் மீது ராணுவம் நடத்திய தாக்குதலுக்காக வருந்துகிறேன் என்றும்; மாநில சுயாட்சி வழங்குவது பற்றி விவாதிக்கலாம் என்றும், பிரதமர் மன்மோகன்சிங் டெல்லியிலிருந்து பேசலாம்; அவர் பேசினால் சோனி யோவோ, தங்கபாலுவோ கோபிக்க மாட்டார்கள். அதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால், இங்கிருந்து கொண்டு காஷ்மீர் பிரச்னையை பேசினால், ஆர்ப்பாட்டம் நடத்தினால், நாங்கள் அனுமதிக்க முடியுமா? அப்புறம் ஜன நாயகத்தை யார் காப்பாற்றுவது? எல்லாவற்றையும் நாங்கள் தானே காப் பாற்ற வேண்டும்? எமது தேசபக்தியில் ஒரு எள் மூக்கு அளவுகூட சோனி யாவுக்கோ, காங்கிரஸ் தேசபக்தர்களுக்கோ சந்தேகம் வந்து விட்டால், எங்கள் கதி என்னாகும்? அதனால் கூட்டணி பாதிக்கப்பட்டு விட்டால், நாடே நாசமாகிவிடாதா? அதனால், எங்கள் காவல்துறையையும் அரசியல் மயமாக்கியுள்ளோம் உடன்பிறப்பே” என்று கலைஞர் பூரித்து எழுதலாம்.

பஞ்சாபில் சீக்கியர்கள் போராட்டம் நசுக்கப்பட்டதைக் கண்டித்தும், காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை நியாயப்படுத்தியும், முரசொலி மாறன் நூல்களை எழுதினாரே! மாறனின் மாநில சுயாட்சி நூலை பக்கம் பக்கமாக ‘முரசொலி’யில் கருணாநிதி அண்மையில் வெளியிட்டாரே, என்று தி.மு.க. வில் மிச்சம் மீதி இருக்கும் கொள்கைவாதிகள் எவராவது கேட்டுவிட வேண்டாம்.

“கேட்டால், பெரியாரோடு நான் பழகியவன்; அண்ணாவோடு ஒன்றாக சாப்பிட்டவன்; தெரியுமா?” என்றுதான் பதில் வரும்.

“கோட்டையில் சுதந்திர நாள் கொடி ஏற்றும் உரிமையை நீங்கள் வாங்கிக் கொண்டு, சுதந்திரமாக கருத்துக் கூறும் உரிமையை பறிக்கலாமா?” என்று கேட்டால், அதற்கும் காவல்துறை வழக்குப்போட்டு, பாளையங் கோட்டை சிறைக்கு அனுப்பிவிடுவார்கள்!

இங்கே இலவசங்கள் தான் உண்டு; ஆனால் ஜனநாயக உரிமைகளைக் கேட்டால் விலை தரவேண்டும் – அதுதான் சிறை!

**– கோடங்குடி மாரிமுத்து**

**‘இந்து’ ஏட்டின் மதிப்புரை சுட்டிக் காட்டுகிறது**

# அரைகுறையாக தி.க. தொகுத்த “குடிஅரசு”

பெரியார் திராவிடர் கழகம் ‘குடி அரசு’ தொகுப்புகளை வெளியிடுவதற்கு நீதிமன்றத்தில் தடை வாங்கிய கி.வீரமணி, கழகத்துக்கு போட்டியாக, அவசர அவசரமாக ‘குடிஅரசு’ தொகுப்புகளை வெளியிட்டார். இதுவரை 11 தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். கி.வீரமணி வெளியிட்ட தொகுப்புகள் பற்றிய மதிப்புரையை ‘இந்து’ நாளேட்டில் (ஆக.17) ஆய்வாளர் ஏ.ஆர். வெங்கடாசலபதி எழுதியுள்ளார். அதில் கி.வீரமணியை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட ‘குடிஅரசு’ தொகுப்புகளில் ஒவ்வொரு தொகுப்பிலும் அதன் உள்ளடக்கங்களை ஆய்வு செய்து அறிமுக உரை எழுதப்படாததை சுட்டிக் காட்டியுள்ளதோடு, தொகுப்புகளை படிப்போருக்கும், ஆய்வாளருக்கும் அது மிகவும் இன்றியமையாததாகும் என்று சுட்டிக் காட்டியுள்ளார். (பெரியார் திராவிடர் கழக தொகுப்பு ஒவ்வொன்றிலும் அறிமுக உரை எழுதப்பட்டுள்ளது)

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள தொகுப்புகளையும், வே. ஆனைமுத்து வெளியிட்ட தொகுப்புகளையும், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன தொகுப்புகளோடு அவசரமாக ஒப்பிட்டுப் பார்த்ததாகக் குறிப்பிடும் ஆய்வாளர் ஏ.ஆர். வெங்கடாசலபதி, கி.வீரமணி வெளியிட்ட முதல் தொகுப்பில், வ.வே.சு. அய்யர், கிருஷ்ணசாமி சர்மா, சுப்ரமணிய சிவா மறைவு குறித்து, பெரியார் எழுதிய இரங்கல் உரை இடம் பெறாததையும், அது பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட தொகுப்பில் இடம் பெற்றுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவசர கோலத்தில் அள்ளி வீசியதைப் போல் கி.வீரமணி வெளியிட்ட தொகுப்பு, ஏதோ சடங்குக்காக வெளியிடப்பட்ட தொகுப்பாகவே இருப்பதை, ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டுகிறார்கள். கி.வீரமணி வெளியிட்ட ‘குடிஅரசு’ முதல் தொகுப்பில் இடம் பெற்ற பெரியார் கட்டுரைகள் 88. ஆனால் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட முதல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பெரியார் கட்டுரைகளின் எண்ணிக்கையோ 152.

கி.வீரமணி, ‘விடுதலை’யில் தங்களிடம் நான்கு ஆண்டுகளுக்கான ‘குடிஅரசு’ தொகுப்புகளே இல்லை என்றும், வைத்திருப்போர் அனுப்பி உதவுமாறும் அறிக்கை வெளியிட்டார். இப்போது, அந்த நான்கு ஆண்டு தொகுப்புகளும் எங்கிருந்து கிடைத்தது என்பதை வெளிப்படையாக அவர் அறிவிப்பாரா?

பெரியார் திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ தொகுப்புகளைத் திரட்டிய 30 நூலகம் - ஆய்வகங்களின் பட்டியலை நீதிமன்றத்தில் வழக்கு மனுவில் தெரிவித்திருந்தது.

“இது அப்பட்டமான பொய்; இந்த நூலக ஆய்வகங்களில் ‘குடிஅரசு’ பத்திரிகைகளே கிடையாது; எங்களிடமிருந்து திருடியதைத்தான் வெளியிட்டிருக்கிறார்கள்” என்று கி.வீரமணி, நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தார். இப்போது அவரே, ‘குடிஅரசு’ முதல் தொகுதியில் பெரியார் திராவிடர் கழகம் குறிப்பிட்ட 30 நூலகங்களின் பெயர்களையும் பட்டியல் போட்டு, (இரத்தினகிரி என்ற ‘பெரியார் வியாபாரி’ பெயரில்) நன்றி கூறியுள்ளார்.

‘குடிஅரசு’ ஏட்டை பெரியாருடன் இணைந்து தொடங்கியவர் வா.மு. தங்கபெருமாள் பிள்ளை. அவரது மறைவு குறித்து ‘குடிஅரசு’ எழுதிய தலையங்கத்தை கி.வீரமணி தொகுத்த குடிஅரசில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், தங்கபெருமாள் பிள்ளை வழக்கறிஞராக தொழில் செய்து மாதம் ரூ.300 வருமானம் வந்து கொண்டிருந்தபோது, பெரியாருடன் வந்து விட்டார் என்ற செய்தியை ‘குடிஅரசு’ தலையங்கத்தில் இடம் பெற்றுள்ளதாக இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது:

“இரண்டொரு மாதங்களிலேயே மாதம் ரூ.300-க்கு மேல் வரும்படி வந்து கொண்டிருந்த நிலையில் **தந்தை பெரியாருடன் பொது வாழ்க்கையில்** ஈடுபட்டுள்ளார்.” (7-3-1926)

1926 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ தலையங்கத்தில் எப்படி **‘தந்தை பெரியார்’** வந்தார்? அப்போது தந்தை என்றோ, பெரியார் என்றோ அழைக்கப்படாத கால கட்டம்; ஆனால் வீரமணி தொகுத்த ‘குடிஅரசு’ இப்படி, ஒரு தலையங்கம் ‘குடிஅரசு’ ஏட்டில் வெளிவந்ததாக எழுதியிருக்கிறது. அதற்கு அடுத்த வரியிலேயே “(வா.மு. தங்கபெருமாள் பிள்ளை) ஈரோடு கள்ளுக்கடை மறியலில் குற்றம் சாட்டப்பட்டு, **நாய்க்கர்** உள்பட 40 தொண்டர்களோடு மாஜிஸ்திரேட்டால் தண்டிக்கப்பட்டு சிறைவாசம் இருந்தார்” என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன.

மிகவும் கூர்மையாகவும், நுட்பமாகவும், ஆழமாகவும் தயாரிக்கப்பட வேண்டிய ஆய்வுத் தொகுப்புகளை பொறுப்பற்ற முறையில் தயாரித்திருப்பதற்கு இப்படி ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும்.

பெரியார் சிந்தனைகளை தொகுப்பதில் “திருவாளர் 15 லட்சம் குழுவினரின்” கவலையும், அக்கறையும் எந்த ‘லட்சணத்தில்’ இருந்தது என்பதற்கு ஆய்வாளர்களின் மதிப்புரைகளே இப்போது அம்பலமாக்கத் தொடங்கிவிட்டன!

# கழக வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள்

*ஆகஸ்ட் முதல் தேதி திருச்சியில் கூடிய பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழுவில் சேலம் மாவட்டக் கழக அமைப்பாளர் டைகர் பாலன் எழுத்து வடிவத்தில் சேலம் மாவட்டக் கழக சார்பில் முன் வைத்த கருத்துகள்:*

1) திருமணம், பெயர் சூட்டுதல், மரணம் போன்ற குடும்ப நிகழ்வுகளில் பார்ப்பனியத்துக்கு எதிரான மாற்றுப் பண்பாட்டு நிகழ்வுகளை நாம் பின்பற்றி வருகிறோம். அதிலும் கூட பெரியாரின் பணியாளன் என்ற அடையாளத்தோடு சில செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். அதன் வழியாக கொள்கை உணர்வுகளைப் பரப்பலாம். ஈழத்தில் விடுதலைப் புலிகள் போராட்டத்தில் வீரமரணமடைந்த போராளிகளும் ‘மாவீரர்’ என்று பெயர் சூட்டி அவர்களின் இறுதி நிகழ்வுகளில் அந்த மரணத்தில் அடங்கியுள்ள தியாகத்தை உணர்வுகளை வடிவமைக்கிறார்கள். புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் கூட இதைப் பின்பற்றுகிறார்கள்.

பெரியார் தொண்டர்களின் இல்லத்தில் மரண நிகழ்வுகளில் மூடச் சடங்குகளை நாம் தவிர்த்து விடுகிறோம். அதோடு மட்டுமின்றி, உடலை எடுத்துச் செல்லும் இறுதி உர்வலத்தில் முன்னால் ஒரு தோழர் கழகக் கொடி ஏந்திச் செல்ல, அதைத் தொடர்ந்து குழுவாக தோழர்கள் கொடி ஏந்தி இறந்தவரின் இயக்கப் பணிகளை துண்டறிக்கையாக அச்சடித்து வழங்கலாம். அல்லது ‘மோட்சம், பிதுர் போகம்’ மோசடிகளை விளக்கும் துண்டறிக்கைகளை அச்சிட்டு வழங்கலாம். உடல் அடக்கத்தைத் தொடர்ந்து வேறு ஒரு நாளில் படத் திறப்பு நிகழ்ச்சியை நடத்தலாம்.

2) ஒவ்வொரு மாவட்டக் கழக செயல்பாடுகளையும் மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் எழுத்து மூலம் கழகத் தலைமைக்கு தெரிவித்தால், இயக்கச் செயல்பாடுகளை பரிசீலித்து மேலும் சிறப்பாக செயல்படுத்தும் முறைகளை வகுக்க உதவும். கழகத் தோழர்களின் செயல்பாடுகளும் தொய்வின்றி தொடரும்.

3) பல்வேறு மய்யங்களில் செயல்படும் கழகத்தின் அமைப்புக்கான வரையறுக்கப்பட்ட செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் முறை, காவல் துறை அனுமதிக்கு விண்ணப்பித்தல், துண்டறிக்கைகள் வெளியிடுதல் தொடர்பாக வரைமுறை செயல் திட்டங்களை விளக்கி, தலைமைக் கழகம் சிறு நூலாக வெளியிட்டால், மிகவும் பயன் தரும்.

4) கழகக் கொடி - கொள்கை விளக்க அறிக்கையை தயாரிப்பதும் கழகப் பரப்புரைக்கான பாடல்கள் அடங்கிய ‘ஒலி’நாடாவும் தேவை எனக் கருதுகிறோம்.

5) நாம், கூட்டங்களில் கடவுள், ஆத்மா மறுப்புகளைக் கூறி வருகிறோம். இவை மட்டுமின்றி, இன்று எதிர் கொள்ளும் சவால்களை உள்ளடக்கி, அதை எதிர்கொள்ளக் கூடிய உறுதிமொழி ஒன்றை உணர்வுள்ள வரிகளாக உருவாக்கி, நிகழ்வுகளில் அந்த ‘உறுதி ஏற்பை’ வழக்கமாக்கிக் கொண்டால், கொள்கை உணர்வுகளுக்கு வலிமை சேர்க்கும் என்று கருதுகிறோம்.

6) ஒவ்வொரு மதப் பண்டிகையின் போதும் அதைத் துண்டறிக்கையாக வெளியிடுவதற்கேற்றவாறு கழக ஏட்டில் வெளியிட்டு, அதை கழகத் தினர் துண்டறிக்கைகளாக அச்சிட்டு வழங்கலாம்.

7) கழகத்தின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க பொருளாதார வசதி படைத்தவர்களிடமிருந்து நிதி திரட்டி கழகத் தலைமையிடம் ஒப்படைக்க, தனி செயல் திட்டத்தை வகுப்பது அவசியம் என்று கருதுகிறோம்.

8) ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு நன்கொடையும், அத்துடன் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளையும் அனுப்பினால் இதழ் மேலும் சிறக்கும்.

9) அடுத்த தலைமுறையிடம் பெரியார் கருத்துகளைக் கொண்டு செல்ல மாணவர்களுக்கு பெரியாரியல் தொடர்பான பேச்சு, கட்டுரைப் போட்டிகளை தமிழகம் தழுவிய அளவில் நடத்துவது அவசியம்.

10) கழக ஏட்டுக்கு சந்தாக்களை அதிகமாக சேர்ப்பதில் தோழர்கள் கூடுதல் கவனம் செலுத்தி செயல்பட வேண்டும். கழக ஏட்டின் வழியாக கழகத்தின் தொடர் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளும்போது சந்தாதாரர்கள் கழகத்தைப் பாராட்டி நன்கொடை கேட்கும் போது வழங்க முன் வருகிறார்கள். இதை நாங்கள் நடைமுறை அனுபவத்திலிருந்து அறிய முடிந்தது.

11) ஆதரவாளர்களை கழக வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் திட்டங்கள் குறித்து ஆலோசிக்க வேண்டும். ஒத்த சிந்தனையுள்ள, வசதியுள்ள தோழர்களின் உறவினர்கள் மரணமடைந்தால் அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் அவர்களிடமிருந்து ஏதேனும் ஒரு கொள்கைப் பரப்பும் நூலை வெளியிடுவதற்கான தொகையைப் பெற்று, அந்த நூலில் இறந்தவரின் படத்தைப் போட்டு, அவரது நினைவாக நூலை வெளியிடலாம்.

12) பொது மக்கள் கூடுமிடங்களில் குறிப்பாக பேருந்து நிலையம் போன்ற பகுதிகளில் பெரியார் கருத்துகளடங்கிய தட்டிகளை கழகத்தின் பெயரோடு வைக்கலாம்.

13) தோழர்கள் சந்திக்கும் போதெல்லாம் பெரியார் சிந்தனைகள் பற்றி பேசுவதும், புதிய செயல் திட்டங்கள் பற்றி விவாதிப்பதும் கழக ஈடுபாட்டை மேலும் வலிமைப்படுத்தும்.

14) கழகப் பரப்புரையாளர்கள் நடத்தும் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை ஒளி நாடாவாக பதிவு செய்து, உள்ளூர் கேபிள் டிவி. இயக்குநர்கள் வழியாக விளம்பரம் செய்து, ஒளிபரப்ப ஏற்பாடு செய்யலாம்.

15) பேச்சாற்றல், பாடுதல், பல குரலில் பேசுவது, இசைக் கருவிகளை இசைப்பது என்று தோழர்களிடம் உள்ள திறமைகளை மேம்படுத்தி, கழகத்தின் பரப்புரைக்குப் பயன்படுத்த வேண்டும்.

16) தீண்டாமை ஒழிப்புப் போராட்

(4 ஆம் பக்கம்)

# திண்டுக்கல்லில் ‘குடிஅரசு’ தொகுப்பு நூல் அறிமுக விழா

*15.8.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 7 மணிக்கு திண்டுக்கல் சகாய மாதா மக்கள் மன்றம் மண்டபத்தில் திண்டுக்கல் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பாக ‘குடிஅரசு’ தொகுப்பு நூல் அறிமுக விழா நடைபெற்றது.*




திண்டுக்கல் மாவட்ட தலைவர் துரை. சம்பத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னதாக பெரியார் பெருந்தொண்டர் ஆசிட் தியாகராசன் உரையாற்றினார். தனது கடந்த கால நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டு, திராவிடர் கழகத்தைவிட பெரியார் திராவிடர் கழகம் எந்த வகையில் தன் பார்வையில் சிறப்பாக செயல்படுகிறது என்பதை விளக்கினார். சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி ‘குடிஅரசு’ தொகுப்புகளை வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட சக்தி மகளிர் கலைக் குழுவின் தலைவர் சந்திரா, தமிழ்ப் பண்ணை சகோதரி பவுலின், குழந்தை ஆகியோர் உரையாற்றினர்.

சட்டமன்ற உறுப்பினர் பால பாரதி இந்த நூல் வெளியிடும் வாய்ப்பிற்கு மகிழ்ச்சியும், நன்றியும் தெரிவித்துக் கொள்வதாகவும், பெண்ணாக பிறந்தவர்கள் அனைவரும் எந்த இயக்கத்தில் இருந்தாலும் பெரியாரின் கருத்துகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்றும் இன்றைக்கும் இருக்கக் கூடிய பெண்ணடிமைப் பிரச்சினைகளை நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும் எனவும் பேசினார். பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், தனது உரையில்:

பெரியார் தன் வாழ்நாளில் எத்தனையோ வழக்குகளை சந்தித்தார். தண்டனைகள் பெற்றார்.இந்த சமுதாய விடுதலைக்காக பாடுபட்ட தலைவரை பெரியார் திடலில் வைத்து வெளிவராமல் தடுத்தனர். அங்கிருந்து பெரியாருக்கு, பெரியார் திராவிடர் கழகத்தால் விடுதலை கிடைத்துள்ளது. பார்ப்பான் புத்தி பின்புத்தி என பெரியார் கூறியதாக வீரமணி எங்களுக்கு பலமுறை வகுப்பு எடுத்துள்ளார். இன்றைக்கு வீரமணி புத்தியே பின்புத்தி ஆகிவிட்டது. பல தலைவர்களின் புத்தகங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டும், திரித்து விடுவார்கள் என்ற கூறி பெரியார் நூலை நாட்டுடமை ஆக்காமல் வீரமணி தடுத்தார். ஆனால், இன்று நீதிமன்றம் பெரியார் கருத்தை மக்கள் சொத்தாகவே அறிவித்துவிட்டது. பல்வேறு சட்டங்களில் நானும் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் கைது செய்யப்பட்டோம். புதிதாக எங்கள் மீது வீரமணி திருட்டு வழக்கு ஒன்றை போட்டார். திருட்டு பட்டம் கிடைத்தாலும்கூட, நாம் பரப்பிக் கொண்டிருக்கும் பெரியார் கருத்தை திருடியதாக சொல்வதால் பெருமைப்படுகிறோம். ஒருக் கூட்டம் சிறப்பான கூட்டமா? சாதாரண கூட்டமா? என்பதை பார்வையாளரின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்காமல், விற்பனையான புத்தகத்தின் அளவை வைத்துத்தான் பெரியார் தீர்மானிப்பார். எனவேதான் யாரும் வெளியிட முன் வராத ‘குடிஅரசு’ தொகுப்புகளை பல்றேு சிரமங்களுக்கு இடையில் பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுகிறது. நாம் வெளியிட்ட பிறகு தான், நம்மை விமர்சிப்பதற்காகவாவது பல ஊர்களில் திராவிடர் கழகம் கூட்டம் நடைபெறுகிறது. பெரியார் இயக்கங்கள் பல இருக்கின்றன என்பதாவது மக்களுக்கு தெரிய வரும் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம் என்று பேசினார்.

இறுதியாக சிறப்புரையாற்றிய கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், “நாங்கள் பெரியார் திராவிடர் கழகத்தை துவங்கியபோது பெரியார் காலத்தின் எழுச்சியை உருவாக்குவோம் என்றுதான் சொன்னோம். அதேபோல தி.க.வையோ, அதன் தலைவர் வீரமணியையோ நமது மேடைகளில் விமர்சிப்பது தேவையற்றது என்ற முடிவையும் எடுத்தோம். ஆனால், இந்த பெரியார் கருத்துகளை பரப்புவதற்கே தடையாக அவர்கள் வந்ததால், நாம் அந்த துரோகத்தை அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்று கூறி ‘குடி அரசு’ வழக்குகள் பற்றி விரிவாக பேசினார்.

1933 இல் ‘மெயில்’ பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியது. சுயமரியாதை இயக்கம் இங்கு இருப்பதால், பொது இடங்களில் மதப் பிரச்சாரம் செய்ய முடியவில்லை. கோவிலுக்குள்ளும், சர்ச்சுக்குள்ளும், மசூதிக்குள்ளும் மட்டும் தான் பிரச்சாரம் செய்ய முடிகிறது என்றும், காந்தி அவர்களே தலையிட்டு சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று எழுதியது. இது எட்டே ஆண்டுகளில் ‘குடிஅரசு’ இதழ் செய்த புரட்சி ஆகும்.

மாறுபட்ட கருத்துகளைகூட ‘குடிஅரசி’ல் வெளியிட்டு, கருத்துச் சுதந்திரத்தை வழங்கியவர் பெரியார் என்பதற்கான வரலாற்றுச் செய்திகளை முன் வைத்து, பெரியாருக்கு நேர் எதிராக வீரமணி செய்த கொள்கை திரிபுகள் பற்றி விரிவாக பேசினார். இறுதியாக திண்டுக்கல் நகர தலைவர் துரை. சுப்ரமணி நன்றி கூறினார்.

திண்டுக்கல் மாவட்ட செயலாளர் இரவணா முன்னிலை வகித்தார். பழனி பகுதியிலிருந்து தோழர்கள் நல்லதம்பி, மருதமூர்த்தி, முருகன் உட்பட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மொழி மாற்றமா, வழி மாற்றமா?

***மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடான ‘தீக்கதிரில்’ (ஆக.13) வெளிவந்த ஆசிரியருக்குக் கடிதம்.***

தமிழக அரசின் நிதி உதவியோடு, திராவிடர் கழகம் தயாரித்த “பெரியார்” திரைப்படம் தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த படத்தின் முன்னோட்ட நிகழ்ச்சி குறித்து ‘விடுதலை’யில் விரிவான செய்தி வெளிவந்துள்ளது. பெரியார் படம் தெலுங்கு மொழியில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. ஏனைய இந்திய மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு, இந்த படம் வெளியிடப்பட வேண்டும்.

ஆனால், தெலுங்கில் இந்த படத்திற்கான தலைப்பை, “பெரியார் ராமஸ்வாமி நாயக்கர்” என்று மாற்றியுள்ளனர். பெரியாரை நாயக்கர் என்ற யாராவது குறிப்பிட்டால், ‘விடுதலை’ கடும் கோபத்தோடு விமர்சிக்கும். அது நியாயமானதே! ஆனால், அந்த இயக்கமே ஆந்திராவில், பெரியாருக்குப் பின்னால், நாயக்கர் என்று சாதிப் பட்டத்தை ஒட்ட வைத்துள்ளதன் பொருள் என்ன? இதனால் அந்த படம் ஆந்திராவில் நன்றாக ஓடும் என்று நினைக்கிறார்களா? சாதிப் பட்டத்தை தூக்கியெறிந்த, சாதி ஒழிப்பிற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த அந்த மகத்தான தலைவருக்கு இழைக்கப்படும் அநீதி அல்லவா, இது? ‘விடுதலை’ செய்தியில் ஒரு இடத்தில்கூட, தெலுங்கில் என்ன பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், மேடையில் வைக்கப்பட்டுள்ள பேனரில் தெலுங்கு மொழியில், “பெரியார் ராமஸ்வாமி நாயக்கர்” என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. தமிழர்கள் யாரும் தெலுங்கு மொழியை படிக்க மாட்டார்கள் என்று நினைத்து விட்டார்கள் போலும்!

ஐதராபாத்தில் பெரியார் சிலை வைக்க வேண்டும் என்று வீரமணி கோரியுள்ளார். அந்த சிலையை தமிழக அரசு செய்து தரும் என்று துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். ஆந்திர அமைச்சர், சிலைக்கான இடம் ஒதுக்கப்படும் என்று ஒப்புதல் அளித்துள்ளார். அந்த பீடத்திலாவது, “ராமஸ்வாமி நாயக்கர்” என்று பொறிக்காமல் விட்டால் சரி.

**– க. வரதராஜுலு, லட்சுமிபுரம், தேனி**

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

டத்துக்கு மாநில மாநாடுகளில் பங்கேற்பதுபோல் தோழர்கள் ஆண்கள், பெண்கள் என்று பெருமளவில் பங்கேற்க வேண்டும்.

17) எனது தாயார் மறைவின்போது பெண்களே உடலை சுமந்து சென்று இடுகாட்டில் அடக்கம் செய்தனர். இறுதி நிகழ்ச்சிக்கான செலவுகளை தோழர்களே ஏற்றுக் கொண்டனர். அதற்காக தோழர்கள் திரட்டிய நிதி சற்று கூடுதலாகவே இருந்ததால் கொளத்தூர் ஒன்றியத்தில் இயக்க வழியில் நிகழும் நிகழ்வுகளுக்கும் அந்த நிதியை பயன்படுத்துவதாக சேமிப்பில் வைத்துள்ளோம். எனது தாயார் மறைவையொட்டி, அவரது நினைவாக ஒரு நூலை வெளியிட நான் ரூ.10000-த்தை நன்கொடையாக கழகத் தலைவரிடம் வழங்குகிறேன். பெரியார் தொண்டர்கள் குடும்பத்தில் நிகழும் வாழ்வியல் நிகழ்வுகளை நிகழ்த்தக்கூடிய மாற்று செயல் முறைகளை விளக்கிடும் நூல் ஒன்றைத் தயாரிப்பதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். (ரூ.10000 நிதியை கழகத் தலைவரிடம் பாலன் வழங்கினார்)


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
**தொடர்புக்கு: ஆசிரியர்,**
**29, பத்திரிகையாளர் குடியிருப்பு,**
**திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,**
**சென்னை-41.**
**தொடர்புக்கு புதிய எண்:**
**✆ 99416 13535**

**தோழர்களே! தீண்டாமை பட்டியல் தயாரிப்புப் பணிகளை தொடங்கி விட்டீர்களா?**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th August 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஆகஸ்டு 26, 2010 | புரட்சி 9 | முழக்கம் 33 | விலை: ரூ.2.50


**✦ கொள்கைக்காக உயிர்விட்ட போராளிகளின் நினைவிடம் சிதைந்து கிடக்கிறது ✦ திருச்சியில் பெரியார் திறந்து வைத்த செயல்வீரன் பிரான்சிஸ் நினைவு படிப்பகம் கழிப்பிடமாகிவிட்டது ✦ சட்ட எரிப்பில் சிறைச் சென்ற 80 வயது போராளி திருச்சியில் கழிப்பறை கழுவுகிறார் ✦ வீரமணியின் மகன் "போராளி", "தியாகி" – வாரிசாகி விட்டார்**

# பெரியார் சொத்துக்கள்: பயனடைவது யார்?

## தி.க. பரப்பிவரும் பொய் பிரச்சாரங்களுக்கு பதிலடி

பெரியார் திராவிடர் கழகத்துக்கு எதிராக 'விடுதலை' ஏட்டில் 'பூனைக் குட்டி வெளியே வந்து விட்டது' என்ற தலைப்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் கலி. பூங்குன்றன் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையை பல லட்சம் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து தமிழகம் முழுதும் தி.க. தலைமை பரப்பி வருகிறது. இந்த நிலையில் 'கீற்று' இணையதளத்தில், 'பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது; பெருச்சாளிகள் ஜாக்கிரதை' என்று தி.க. வாதங்களின் முது கெலும்பை முறிக்கும் விரிவான கட்டுரை, கருப்புப் பூனை என்ற பெயரில் வெளி வந்துள்ளது.

இணையதளத்தில் வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்று, பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்த அந்த விரிவான கட்டுரையின் சில பகுதிகளை மட்டும் இங்கே வெளியிடுகிறோம். இணைய தளத்தில் இடம் பெற்றுள்ள கட்டுரையின் முழு வடிவத்தை 'திராவிடர் மய்யம்' என்ற அமைப்பு சிறு நூலாக ரூ.3 விலையில் வெளியிட்டுள்ளது .

'குடிஅரசு' வெளியீட்டு விழாவில், "பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு நேரடியாக பெரியாரால் எழுதி வைக்கப்படாத சொத்துக்களை அரசுடைமையாக்க வேண்டும்" என்று பெரியார் திராவிடர் கழகம் அரசுக்கு கோரிக்கை விடுத்தது. அதைக் கண்டித்து திராவிடர் கழகம் சார்பில் கவிஞர் கலி. பூங்குன்றன் "பூனைக் குட்டி வெளியே வந்தது!" என்ற தலைப்பில் 'விடுதலை'யில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அது இலட்சக்கணக்கில் அச்சிடப் பட்டு திராவிடர் கழகப் பொதுக் கூட்டங்களிலும், புத்தகச் சந்தைகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் சொத்துக்களை அரசு எடுத்துக் கொண்டால் கடவுள் மறுப்புத் தத்துவங்களைப் பிரச்சாரம் செய்வார்களா? விடுதலை நாளிதழ் வருமா? பார்ப்பான் நீதிபதியாய் வாழும் நாடு கடும்புலி வாழும் காடு எனப் பிரச்சாரம் செய் வார்களா? அரசு கையில் உள்ள செங்கல்வராயன் அறக்கட்டளை, பச்சையப்பன் அறக்கட்டளை களின் நிலைபோல ஆகாதா? பார்ப்பன அரசு வந்தால் பெரியார் கொள்கையைப் பரப்புமா? என்றெல்லாம் ஆணித்தரமான வாதங்களை வைத்து பெ.தி.க.வை அதிர வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டுரைக்கு முன் வீரமணி அவர்களோ பெ.தி.க. தலைவர் கொளத்தூர் மணியை "வீரப்பன் காட்டில் பெய்த மழையில் நனைந்தவர்", "துள்ளும் துரோகத்தின் முதுகெலும்பை ஒடிப்போம்" என்றெல்லாம் இ.கு.க. கட்சியின் வட்டச் செயலாளர் வண்டு முருகனைப் போல முழங்கி வருகிறார். இதற் கெல்லாம் பதில் சொல்லி தமது தரத்தைத் தாழ்த்திக் கொள்ள விரும்பாமல் பெ.தி.க. எந்த மறுப்பும் வெளியிடாமல் அமைதியாக இருக்கிறது. எனவே பெரியார் அறக்கட்டளைக்கு நன்கொடை கொடுத்த இலட்சக்கணக்கான தமிழர்களின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

### நாய் பெற்ற தெங்கம்பழம்

திருச்சி ஓயாமாரிச் சுடுகாட்டில் பட்டுக் கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச் சாமி என்ற இரண்டு சட்ட எரிப்பு வீரர்களின் நினைவிடம் இருக்கிறது. இவற்றிற்கு ஒரு வரலாறு இருக்கிறது. இவர்கள் இருவரும் 1957 ஆம் ஆண்டு சாதி ஒழிப்புக்காக அரசியல் சட்டத்தை எரித்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்கள். சிறைக் குள்ளேயே சிறைக் கொடுமைக்குப் பலியானவர்கள். இப்போராளிகளின் உடலைக்கூட அப்போதைய காங்கிரஸ் அரசு வெளியில் தோழர்களிடம் தராமல் சிறைக்குள்ளேயே புதைத்தது. அன்னை மணி யம்மையார் வீராங்கனையாக வெகுண்டெழுந்தார். "உயிருடன் அனுப்பினோம் - பிணத்தையாவது கொடுங்கள்" எனப் போராடி, அரசு கொடுத்த சிதைந்த உடல்களை இலட்சக்கணக்கான தோழர்கள் புடை சூழ தனது தலைமையில் திருச்சி ஓயாமாரிச் சுடுகாட்டில் புதைத்து அங்கே ஒரு நினைவுச் சின்னத்தையும் உருவாக்கி வைத்தார். ஆயிரக்கணக்கான தோழர்கள் அப்போராளிகளின் உடலின் முன்பு எங்கள் வாழ்வில் எங்கள் குடும்பத்தில் இனி சாதி மறுப்புத் திருமணங்களைத் தான் செய்வோம் என உறுதி எடுத்துக் கொண்டு நடத்தியும் காண்பித்தனர். அப்போது சிறையில் இருந்த பெரியார் விடுதலை ஆன பிறகு அந்த நினை விடங்களில் தானே தலைமையேற்று கல்வெட்டுக் களைத் திறந்து வைத்துள்ளார். இப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க போராளிகளின் நினை விடத்தின் தற்போதைய நிலை என்ன தெரியுமா? அந்தப் படத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம்.

ஈழத்தில் புலிகளின் ஆட்சிக் காலத்தில் வீரஞ் செறிந்த யுத்தங்களுக்கு இடையே எதிரிகளின் குண்டுமழை பொழிந்து வந்த காலத்திலும் மாவீரர் துயிலும் இல்லங்கள் எவ்வளவு கவனமாக பேணி பாதுகாக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். தற்போதைய களத்தில் புலிகள் பின்னடைவான பிறகு மாவீரர் துயிலும் இல்லங்களை சிங்களன் சீரழிக்கிறான். ஆனால் எந்த முக்கிய வேலையும் இல்லாமல் ஆட்சிகளுக்கு காக்காய் பிடிப்பதையே முழு நேரப் பணியாகச் செய்து வரும் திராவிடர் கழகத் தலைமை - பெரியார் ட்ரஸ்ட் தலைமை - அரசுக்கு சொத்து போய்விட்டால் சொத்து நாச மாகிவிடுமே என கவலைப்படும் வண்டுமுருகன்கள், இந்த இயக்கத்துக்காக கொள்கைக்காக உண்மை யாகவே உயிர்விட்ட போராளிகளின் நினை விடத்தை - பெரியாராலும் அன்னை மணியம்மை யாராலும் உருவாக்கப்பட்ட நினைவிடத்தை எதிரி களால் இல்லாமல் தாமே அழித்துச் சிதைத்து விட்டனர்.

பெரியார் காலத்தில் திருச்சி மாநகரத்தில் மாபெரும் செயல்வீரராகத் திகழ்ந்தவர் பெரியாரின் போர்ப் படைத் தளபதி திருச்சி பிரான்சிஸ். திருச்சியை பெரியாரின் கோட்டையாக வைத் திருந்த தளபதி பிரான்சிஸ். ஆசிட் தியாகராசன், குடந்தை ஜோசப் போன்ற பல செயல்வீரர்களின் பாசறை யாகத் திருச்சியை உருவாக்கி வைத்தவர் பிரான்சிஸ். அவரது மறைவுக்குப் பிறகு பெரியாரே நேரடியாக பிரான்சிஸ் வாழ்ந்த வீட்டுக்குச் சென்று அந்த வீட்டருகே பிரான்சிஸ் நினைவுப் படிப்பகத்தைத் திறந்து வைத்தார். திருச்சியின் மையப் பகுதியான உப்புப் பாறையில் பெரியார் திறந்து வைத்த அந்த பிரான்சிஸ் நினைவுப் படிப்பகம் இப்போது அந்தப் பகுதி மக்களின் கழிப்பிடமாக மாறிவிட்டது. பிரான்சிஸ் வாழ்ந்த வீடு குட்டிச் சுவராக இடிந்து மண்ணாகிப் போய் விட்டது. இப்படிப்பட்ட கொள்கை அடையாளங்கள் தரைமட்டமாகிப் போய்விட்டன.

சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றதால் திருச்சியில் தான் சொந்தமாக நடத்தி வந்த இரண்டு உணவு விடுதிகளையும் இழந்து குடும்பத்தினரை வறுமையில் வாட விட்டு இன்னும் மீடேற முடியாமல் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அதே இடத்தில் அதே பகுதியில் கழிவறையைச் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் மிகச் சிறு வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையின் மீதிக் காலத்தைக் கடத்தி வருகிறார் 80 வயதைக் கடந்த சட்ட எரிப்பு வீரர் மாரியப்பன். இவரது நிலை குமுதம் ரிப்போர்ட்டர் இதழிலும், பல இணைய தளங்களிலும், வலைப் பூக்களிலும் பதிவாகி உள்ளது. வெளி உலகுக்கும் வந்துள்ளது. இவற்றைப் பார்த்து பார்ப்பன சிரிப்பு நடிகன் எஸ்.வி.சேகர் கூட ஒரு இலட்ச ரூபாய் தர முன் வந்தான். பெரியார் அறக்கட்டளை???

### வாரிசு அன்புராஜ்

இதே காலகட்டத்தில் இலட்சக்கணக்கில் வருமானம் வரக்கூடிய பெரியார் கல்வி நிறுவனங்கள்

(2 ஆம் பக்கம்)

# சமயபுரம் கோயில் அறங்காவலர் அறக்கட்டளை உறுப்பினராகும்போது இயக்கத்துக்கு உழைப்போருக்கு அதில் இடமில்லையா?

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு நவீன கட்டிடங்கள் கட்டப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டு அவற்றுக்கு வாரிசாக ஒரு மாபெரும் தத்துவவாதி, ஆற்றல்மிக்க செயல்வீரன், போராளி அன்புராஜ் நியமிக்கப்படுகிறார். கொள்கையையும், கொள்கைக் காரர்களையும் பாதுகாக்கத்தான் பெரியார் சொத்துக்களைச் சேர்த்தார். மறைந்த போராளிகளின் நினைவிடத்தையும் அந்த சொத்தால் பாதுகாக்க முடியவில்லை, சுயமரியாதைக் காலத்தின் அடையாளங்களாக இன்னும் வாழ்ந்து வரும் மாரியப்பன் போன்ற போராளிகளையும் காப்பாற்றப் பயன்படவில்லை என்றால் அந்தச் சொத்து அரசுக்குப் போனால்தான் என்ன தவறு? ஆயிரங் கோடி சொத்து இருந்தும் கழக வளர்ச்சிக்காக பெரியாராலேயே உருவாக்கப்பட்ட படிப்பகங்கள் கழிப்பிடங்களாகவும், மணியம்மையாரால் உருவாக்கப்பட்ட நினைவிடங்கள் உருக்குலைந்து முட்புதர்களாகவும், செயல் வீரர்களின் பாசறைகள் குட்டிச் சுவர்களாகவும் சிதைந்து போய்க் கிடப்பதை திருச்சியில் நேரில் இன்றும் காணலாம். நாய் பெற்ற தெங்கம்பழமாக - நாய்க்குக் கிடைத்த தேங்காய் போல எதற்கும் பயன்படாத சொத்துக்கள் அரசுக்குப் போனால்தான் என்ன தவறு?

### அரசுக்குப் போய்விட்டால்....

அரசுக்குப் போய்விட்டால் கடவுள் மறுப்புப் பிரச்சாரம் செய்வார்களா? என்று கேட்டுள்ளனர். மலையாளி என உங்களால் இகழப்பட்ட எம்.ஜி.ஆர். தனது ஆட்சிக் காலத்தில் மாவட்டந் தோறும் பெரியார் நினைவுச் சுடரை நினைவுச் சின்னத்தை உருவாக்கினார். பெரியார் பெயரில் மாவட்டத்தை அமைத்தார். அவரது வாரிசாக வந்த பார்ப்பன ஜெயலலிதா தனது ஆட்சிக் காலத்தில் பெரியாரின் குடிஅரசு இதழ்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியாக அரசு சார்பாக அச்சிட்டு மக்களிடம் கொண்டு செல்ல உத்தரவைப் பிறப்பித்தார். அப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக இருந்த இராமர் இளங்கோ அவர்களுக்கு ஒப்புதலை அளித்தார். அந்நிறுவனத்தின் நடவடிக்கைக் குறிப்புக்களில் ஆதாரம் இருக்கிறது. அப்போது அந்த அரசு குடி அரசை வெளியிட்டுவிடக் கூடாது என இரகசியமாகத் தடை போட்டது யார்?

“பார்ப்பான் நீதிபதியாய் வாழும் நாடு கடும்புலி வாழும் காடு” என அட்சரம்பிசகாத பெரியாரின் இந்த முழக்கம் மத்திய பார்ப்பன அரசாங்கத்தில் அனுமதி பெற்றுத் தானே அச்சிடப்படுகிறது. தனியாக யாருக்கும் தெரியாமல் அடர்ந்த காடுகளில் அச்சிடப்பட்டு, உழைக்கும் அடித்தட்டு மக்களிடம் இரகசியச் சுற்றாகவா விடுதலை விநியோகிக்கப் படுகிறது? பார்ப்பனமயமாக உள்ள மத்திய அரசு தானே பார்ப்பன எதிர்ப்புக் கருத்துக்கள் அடங்கிய விடுதலைக்கு அங்கீகாரம் கொடுத்துள்ளது. அந்த பதிவு எண்ணை தினமும் விடுதலையில் 8 ஆம் பக்கத்தில் போட்டுத் தானே பத்திரிகை நடத்துகிறீர்கள்?


### அரசைவிட அறக்கட்டளையில்தான் சமூக நீதிக்குப் பஞ்சம்

பெரியார் கல்வி நிறுவனங்கள் சமூகநீதிக் கண்ணோட்டத்தில் செயல்படுகிறதா? அரசு நடத்தும் கலை, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் இன்றும் 69 விழுக்காடு இடஒதுக்கீடு கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழக அரசின் உயர்கல்வித் துறை சார்பாக பெரியார் மணியம்மை பல்கலைக் கழக மாணவர் சேர்க்கைக்காக அரசு ஒதுக்கீட்டுக்கு பாதி இடங்களை கேட்டுள்ளது அரசு. அரசுக்கு இடங்களைக் கொடுத்தால் அவற்றில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு அவசியம் பின்பற்றப்பட்டிருக்கும் - சமூகநீதியை அரசு செய்யுமா? என தற்போது கேள்வி எழுப்பும் மடாதிபதிகள் இன்று வரை பெரியார் கல்வி நிறுவனங்களில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தவே இல்லை. தெம்பிருந்தால் கல்லூரி மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீடு நிலையை வெளிப்படையாக நாணயமாக அறிவியுங்களேன்?

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற மத்திய அரசு கல்வி நிறுவனங்களே அவற்றை வெளிப்படையாக இணையதளங்களில் வெளியிடுகின்றன. இந்திய ஆட்சிப் பணிக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் நிறுவனமே ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் இடஒதுக்கீட்டு நிலை என்ன என விளக்கமாகப் பட்டியலோடு வெளியிடுகிறது. அரசைவிட அதிகமாக சமூக நீதியை நிலைநாட்ட வேண்டிய பெரியார் ட்ரஸ்ட் நடத்தும் கல்வி நிறுவனங்கள் இடஒதுக்கீட்டு நிலையை வெளிப்படையாக அறிவிக்குமா?

பெரியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீடு இல்லை. அது போகட்டும், வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு இருக்கிறதா? தமிழ்நாடு முழுவதுக்கும் 31 சி சட்டத்தைக் கண்டுபிடித்து இடஒதுக்கீட்டைப் பாதுகாத்தோம் என மார்தட்டிக் கொள்ளும் அறக்கட்டளைத் தலைவர் வீரமணி அவர்களே!

முதலில் இதுவே பித்தலாட்டம். 31 சி சட்டத்தின்



***சட்ட எரிப்புப் போராட்டத்தில் – களப்பலியான மாவீரர்கள் –பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமியின் நினைவிடங்களின் கதியைப் பாருங்கள்!***

அடிப்படையில் 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற சட்ட முன் வரைவைத் தயாரித்தவர் நீதியரசர் வேணுகோபால்தான். வீரமணி அல்ல. நீதியரசர் உருவாக்கிய சட்ட முன்வடிவைச் சட்டமாக்கியவர் அப்போதைய முதல்வர் பார்ப்பன ஜெயலலிதா. இடையில் இவர் செய்தது போஸ்ட் மேன் வேலை மட்டுமே. இந்த ஒரு எளிமையான செயலை பெரியார் 1951 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தையே முதன்முதலாகத் திருத்திய போராட்டத்தோடு தொடர்புபடுத்திப் பிரச்சாரம் செய்வது என்ன பிழைப்போ தெரியவில்லை. அது கிடக்கட்டும்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவோ, இணை வேந்தராகவோ வர முடியுமா? சமயபுரம் மாரியம்மன் கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவராக இருக்கும் பக்த சிகாமணி வி.கே.என். கண்ணப்பனைவிட இயக்கத்துக்கு இன்னும் உழைத்து உழைத்து கருப்பு மெழுகு வர்த்திகளாக உருகும் கவிஞர் கலி.பூங்குன்றன், உரத்தநாடு குணசேகரன் போன்றவர்கள் தாழ்ந்தவர்களா? இப்படி தற்போது உழைக்கும் தோழர்களும் இல்லாத, உழைத்து ஓய்ந்த போராளிகளும் இல்லாத, இவர்கள் யாருக்கும் பயன்படாத, அரசு நிறுவனங்களில் உள்ள சமூகநீதிகூட நடைமுறைப் படுத்தப்படாத அறக்கட்டளை சொத்துக்கள் அரசுக்குப் போனால்தான் என்ன தவறு?

அரசு சார்பில் சாலை போடுதல், தொழில் நிறுவனங்கள் உருவாக்குதல் போன்ற பல பணிகளுக்காக நிலங்களை வழங்கியவர்களின் வாரிசுகளுக்கு அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அல்லது தொழில் வாய்ப்புகளை அரசு வழங்குகிறது. ஆனால், பெரியார் அறக்கட்டளைக்குச் சொத்துக்களை வழங்கியவர்களின் வாரிசுகளின் நிலை என்ன? அரசுக்குக் கொடுத்திருந்தாலாவது அவர்களுக்கு ஒரு பயன் இருந்திருக்கும். அல்லது சொத்துக்களைக் கொடுக்கும் நோக்கங்களாவது நிறைவேறியிருக்கும்.

### எது வளர்ச்சி?

ஊன்றிப் படித்து உண்மையை உணருங்கள் என அறிக்கை வெளியிட்டீர்கள். நாங்கள் புத்தகச் சந்தை நடத்துகிறோம். இலட்சக்கணக்கில் புத்தகம் போடுகிறோம் என்றீர்கள். குடிஅரசு வெளியிட்டால் மக்களுக்குப் பயன்படாது என்கிறீர்கள். அதன் பிறகு நீங்களே வெளியிடுகிறீர்கள். பெரியார் திராவிடர் கழகம் குடிஅரசுக்கு அறிவிப்பு வெளியிட்ட பிறகு தானே நீங்கள் போட்டிக்கு வெளியிட்டீர்கள்? அதுவும் அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே 10 ஆண்டுகளுக்கான குடிஅரசு இதழ்கள் எங்களிடம் இல்லை. யாராவது அனுப்பி உதவுங்கள் என விடுதலையில் அறிவிப்பு கொடுத்தீர்கள். பெரியார் இதழ்களை 10 ஆண்டு புத்தகங்களைத் தொலைத்துவிட்ட நீங்களா பெரியார் கருத்தைப் பாதுகாக்க முடியும்?

தமிழ்நாட்டில் 1 கோடி மக்கள் தொகை இருந்த காலத்தில் இரண்டு விழுக்காடு மக்கள் மட்டுமே அதாவது சுமார் 2 இலட்சம் படித்த தமிழர்கள் இருந்த காலத்தில் 20 ஆயிரம் குடி அரசு இதழ்களை அச்சிட்டுப் பரப்பியவர் பெரியார். இன்று மக்கள் தொகை 7கோடி. எழுதப் படிக்கத் தெரிந்தோர் 90 விழுக்காடு. இன்றைய நிலையில் விடுதலை சுமார் 5 கோடி சந்தாக்களை வைத்திருந்தால் அந்த நிலையை பெரியார் காலத்தை அப்படியே தக்க வைத்துள்ளீர்கள் என்று சொல்லலாம். 5 கோடிக்கு மேல் ஆறு கோடி சந்தாக்கள் வைத்திருந்தால் அதைத்தான் வளர்ச்சி என்று சொல்ல முடியும். வெறும் 5000 சந்தாக்களை வைத்துக் கொண்டு ஊன்றிப் படியுங்கள்; ஊன்றிப் படியுங்கள் என்றால்? முதலில் ஊன்றி எழுதுங்கள்.

**குடிஅரசு 27 தொகுப்புக்களையும், 11000 பக்கங்களையும் இணையதளத்தில் ஏற்றி, இலவசமாக யார் வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியை வழங்கியுள்ளதே பெரியார் தி.க.! உங்கள் இணையதளத்தில் பெரியார் ட்ரஸ்ட்டால் இயக்கப்படும் இணையதளத்தில் ஒரே ஒரு 32 பக்க புத்தகத்தையாவது பதிவிறக்கம் பண்ண முடியுமா? இதற்குக்கூட பயன்படாத சொத்து அரசுக்குப் போனால்தான் என்ன தவறு?**

அரசுடைமை ஆகிவிட்டால் பெரியார் பிரச்சாரங்கள் நடைபெறுமா எனக் கேள்வி கேட்பவர்களே, உலகில் எந்தப் போராளி இயக்கம் ட்ரஸ்ட்டை நம்பி உள்ளது? பெரியார் ஒரு புரட்சிக்காரர், சமுதாயத்தை அடியோடு மாற்ற விரும்பியவர், சமுதாயப் புரட்சிக்கு வாய்ப்பாக ட்ரஸ்ட்டோ, அரசோ எதையும் பயன்படுத்தியவர். டிரஸ்ட் இல்லாவிட்டால் இயக்கமே நடத்த முடியாது எனப் புலம்பியவர் அல்ல. 1952 வரை ட்ரஸ்ட் இல்லாமல்தானே இயங்கியுள்ளார். அவர் மட்டுமல்ல உலகின் எந்தப் புரட்சி இயக்கமும் அறக்கட்டளை இல்லாவிட்டால் செயல்படவே முடியாது என அலறித் துடிக்காது. அறக்கட்டளைகள் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். நீங்கள் இயக்கத்தை கருவியாக்கி அறக்கட்டளையைக் காப்பாற்றுவதையே கொள்கையாக்குகிறீர்கள்.

பெரியார் தி.க. எந்த அறக்கட்டளையை வைத்து குடிஅரசை வெளியிட்டது? அறக்கட்டளையில் இருந்து பணம் கொடுத்துத் தான் திராவிடர் கழகத் தோழர்கள் இயங்குகிறார்களா? சொந்தச் சோற்றைத் தின்றுவிட்டு மக்களுக்கு வேலை செய்பவர்கள்

*(3 ஆம் பக்கம்)*

# படிப்பகங்களுக்கு தொண்டர்கள் பெரியாரிடம் வழங்கிய கட்டிடங்களை விற்று காசாக்கும் அவலம்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் இங்கே வாருங்கள் என அறிவித்து வேலை வாங்கினாரே பெரியார்! நீங்கள் தி.க. தோழர்களுக்குப் பணம் கொடுத்துத்தான் வேலை நடக்கிறதா? அப்படி இல்லையே. தி.க. தோழர்களும் கடுமையாக உழைத்து தத்தம் சொந்தச் செலவில்தான் இயக்கம் நடத்துகின்றனர். பிரச்சாரம் செய்கின்றனர். அறக்கட்டளை இல்லாவிட்டால் பிரச்சாரமே நடத்த முடியாது எனக் கூறி அந்தச் சக தோழர்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள். சொத்து இல்லாவிட்டால் இயக்கமே இருக்காது எனக் கூறி உங்களையும் உங்கள் சகோதரர்களையும் கேவலப்படுத்தாதீர்கள்.

பிரபாகரன் எந்த அறக்கட்டளையை வைத்து அமைப்பைத் தொடங்கினார்? தனி அரசை நடத்தினார்? எப்படி அனைத்தையும் தானே உருவாக்கினார்? பெரியார் எப்படி ஒரு அறக்கட்டளையைப் புதிதாக உருவாக்கி வளர்த்தார். அந்தத் தெம்பு, திராணி உங்களுக்கு இருக்க வேண்டாமா? அப்படிப்பட்ட ரோசக்காரனாக - சுயமரியாதைக்காரனாக - எதையும் உருவாக்குபவனாக உங்களைப் பார்க்க முடிந்தால் அதற்குப் பெயர்தான் வளர்ச்சி.

### மணியம்மையார் கவசம்

மிகப் பெரிய குற்றம் ஒன்றை கவிஞர் பூங்குன்றன் கண்டுபிடித்துள்ளார். திருச்சி செல்வேந்திரன் என்ற தி.மு.க. தோழர் எழுதிய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் குறித்த சிறு கட்டுரையில் பெரியாரையும் மணியம்மையாரையும் சிறுமைப்படுத்தி எழுதி அதை பெரியார் தி.க. வெளியிட்டதாம். மணியம்மையாரைக் கொச்சைப்படுத்தியிருந்தால் அது யார் செய்திருந்தாலும் தவறுதான். குற்றம் தான். ஆனால் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லும் யோக்கியதை வீரமணியாருக்கு உண்டா?

தி.மு.க. என்ற ஒரு கட்சி உருவானது ஏன்? எதற்கு? பெரியாரையும் மணியம்மையாரையும் கொச்சைப் படுத்தி கேவலப்படுத்தி உருவானதுதானே தி.மு.க.? தி.மு.க. என்ற ஒரு அமைப்பு இருக்கும் வரை, அந்த தி.மு.க.வுக்கு தி.க. ஆதரவாக இருக்கும் வரை மணியம்மையாரைப் பற்றி பாராட்டிப் பேசக்கூட உங்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது. அறிவு நாணயம் இருந்தால், நீங்கள் பெரியார் வாரிசாக இருந்தால், துணிவிருந்தால் தி.மு.க. தலைவர் கருணாநிதியை அறிவிக்கச் சொல்லுங்கள்.

“தி.மு.க. தொடங்குவதற்கு நாங்கள் சொன்ன காரணம் மிகப் பெரும் தவறு. அதற்காக வருந்துகிறோம். மணியம்மையாரையும் பெரியாரையும் கேவலப்படுத்தி அதனால் உருவான இந்த அரசியல் கட்சியை இன்றே கலைக்கிறேன்.”

- என அறிவிக்கச் சொல்ல முடியுமா? சரி, அது வேண்டாம். தி.மு.க. இல்லாவிட்டால் இந்தப் பார்ப்பனரல்லாத சமுதாயம் படுபாதாளத்தில் வீழ்ந்துவிடும்! எனவே,

“தி.மு.க. ஒரு தவறான முடிவால், தவறான பார்வையால் உருவாக்கப்பட்டுவிட்டது. பெரியார் மணியம்மை திருமணம் மிகச் சரியானது; பொருந்தாத் திருமணம் என அன்று விமர்சித்தது மிகப் பெரும் தவறு; அத் திருமணத்தைக் காரணமாகச் சொல்லி தி.மு.க. தொடங்கியதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன்”

- என ஒரு சிறு அறிவிப்பாவது அறிவிக்க வைக்கத் தயாரா? இது முடியாவிட்டால் பெரியார் தி.க. வைக் குற்றம் சொல்லும் யோக்கியதை உங்களுக்கு இல்லை என்பதுதானே உண்மை?

### தோழர் வீரமணியின் நாடகம்

தோழர் வீரமணி அவர்களின் உச்சக்கட்ட பித்தலாட்ட நாடகம் ஒன்று அம்பலமாகியுள்ளது. பெ.தி.க. கோரிக்கையாக சொல்லப்படுவது என்ன? அறக்கட்டளையை அரசு ஏற்க வேண்டும் என்பதா? இல்லை. அப்படி ஒரு கருத்து அவர்களால் வைக்கப்படவே இல்லை.

பெரியாரால் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டு பிரச்சாரத்துக்கு வாய்ப்பாக உருவாக்கப்பட்ட பெரியார் அறக்கட்டளையை அரசு ஏற்க வேண்டும் என்றோ, அந்த அறக்கட்டளை சார்பில் செயல்படும் விடுதலை, உண்மை, திராவிடன் புத்தக நிலையம் ஆகியவற்றை முடக்க வேண்டும் என்றோ, பெரியார் திராவிடர் கழகத்தினர் யாரும் பேசவில்லை. கோரவில்லை.

அவர்கள் கோரிக்கையெல்லாம், பெரியார் தனது பெயரிலிருந்து அறக்கட்டளைக்கோ, வேறு எந்த வாரிசுகளுக்குமோ மாற்றித் தராத சொத்துக்களை - தனிப்பட்ட கூட்டமொன்றின் பிழைப்புக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் சொத்துக்களை அரசு காப்பாற்றி மக்களுக்கு என ஆக்க வேண்டும் என்பது தான். அப்படி யாருக்கும் எழுதி வைக்கப்படாத சொத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என்பதே தவறு என்றால், அப்படிப்பட்ட வாரிசற்ற சொத்துக்களைத் தனியார்களுக்கு விற்று காசாக்கிக் கொண்டிருப்பது நியாயமா?

சட்ட எரிப்புப் போரில் 600 பேர் கைதான இலால்குடியில் இன்று அறுபது பேர்கூட இல்லையே? ஆனால் அதே ஊரில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலம் அறக்கட்டளைக்கு உள்ளது. பெரியார் காலத்தில் திரும்பிய திசையெல்லாம் திராவிடர் கழகக் கொடி பறந்த திருச்சியில் இன்று பள்ளிக்கூடப் பிள்ளைகளை வைத்துத்தான் கூட்டம் காட்ட வேண்டிய அவலநிலைதான் உள்ளது. பெரியார் தன் சொந்த ஊரை விட்டு திருச்சிக்கு வந்து பணியாற்றவேண்டிய அளவுக்கு தொண்டர்கள் பலம் நிரம்பியிருந்த திருச்சி மாவட்டம் - பல கோடி ரூபாய் சொத்துக்கள் உள்ள திருச்சி மாவட்டம், இன்று ஐம்பது பேர்கூட இல்லாத நிலைக்கு வந்துவிட்டதே. பெரியாரது சட்ட எரிப்புப் போராட்ட அறிவிப்பு மாநாட்டில் ஒரு இலட்சம் பேர் கூடியுள்ளனர். மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனைக்குத் தயாராக பத்தா யிரம் தோழர்கள் வந்துள்ளனர். கைதாகினர். அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து வரிசையாக இந்திய தேசப்பட எரிப்பு, தேசியக் கொடி எரிப்பு, பிள்ளையார் உடைப்பு, காந்தி பொம்மை உடைப்பு எனக் கடுமையான போராட்டங்கள் நடந்துள்ளன. அனைத்திலும் ஆயிரக்கணக்கில் தோழர்கள் சிறை சென்றனர். ஆனால் இப்போது?

**மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை என அறிவித்தால் போராட்டத்திலிருந்து பின் வாங்காமல் சிறை செல்ல ஒரே ஒரு வீரமணியாவது தயாரா? 15 நாள் சிறை என்றால்கூட ஒரு நூறு பேரைத் தயாரிக்க முடியுமா உங்களால்? ஆயிரங் கோடி சொத்துக்கள் இருந்தும் என்ன பயன்? இயக்கத்தை வளர்க்கக்கூட வேண்டாம். பழைய நிலையைக்கூடத் தக்க வைத்துக் கொள்ளக்கூட முடியவில்லையே!**

படிப்பகங்களாக, மனையடிகளாக, நஞ்சை நிலங்களாக, வீடுகளாக பெரியாருக்கு சொத்துக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டதன் நோக்கம் அந்த சொத்துக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் இயக்கம் நன்றாகச் செயல்பட வாய்ப்பாக சொத்துக்கள் பயன்பட வேண்டும் என்பதுதான். அந்த சொத்துக்கள் வழங்கப்பட்டதன் நோக்கங்களுக்கு மாறாக இப்போது அவற்றை யாருக்கும் தெரியாமல் தனியார் நிறுவனங்களுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் திருட்டுத்தனமாக விற்பனை செய்வதைத்தானே பெரியார் தி.க. விமர்சித்தது.

ஏதோ அறக்கட்டளையை அரசு கையகப் படுத்தப்பட வேண்டும் என சொன்னதைப்போல, விடுதலை இதழ் இயங்குமா? உண்மை இயங்குமா? பார்ப்பன எதிர்ப்பு புத்தகங்களை அரசு அச்சிடுமா? என்றெல்லாம் யாரும் எழுப்பாத கேள்விகளுக்கு தேவையில்லாமல் பதில் கேள்விகள் கேட்பது ஏன்?

திருடிக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் திருடன் ஒருவன், தானே “அய்யோ திருடன் ஓடுகிறான், பிடியுங்கள், பிடியுங்கள்” என சத்தம் போட்டுக் கொண்டு ஓடினானாம். பின்னால் துரத்திக் கொண்டு வந்தவர்கள் திருடனை விட்டு விட்டு இல்லாத யாரையோ தேடி ஓடினார்களாம். அப்படி தி.க. தோழர்களை யாரையோ நோக்கி ஓடவிடப் பார்க்கிறார் தமிழர் தலைவர்.

இந்த அறக்கட்டளை அரசுக்குப் போக வேண்டும் எனச் சொல்ல வரவில்லை. எத்தனையோ சாமியார்கள், எத்தனையோ பார்ப்பனர்கள் இந்த நாட்டில் கல்வி நிறுவனங்களை வைத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியார் அறக் கட்டளை தோழர் வீரமணி காலத்தில் பெரியார் தொண்டர்களுக்குப் பயன்படவில்லை. பெரியார் கொள்கை பரவ போதிய அளவு பயன்படவில்லை. ஏதோ வேலை நடக்கிறது. கடவுள் மறுப்பை முன்னிறுத்தி இன்றும் பிரச்சாரம் நடக்கிறது. “பார்ப்பான்” என்ற சொல்லை இன்னும் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறீர்கள்; போகட்டும்.

**பெரியாரை முன் வைத்து ஒரு போராளிக் கூட்டம் பெரியார் தி.க.வாக வளர்கிறது. அரசை அனுசரித்து காரியம் சாதிக்கும் அமைப்பாக தி.க. இருந்துவிட்டுப் போகட்டும். பெரியாரால் முறையாக அறக் கட்டளையாக எழுதி பாதுகாக்கப்பட்டுள்ள சொத்துக்களும் அப்படி எழுதி வைக்கப்படாத வாரிசற்ற சொத்துக்களும் உங்களுக்கே பக்கபலமாக இருக்கட்டும். ஆனால் பெரியார் அந்தச் சொத்துக் களை எந்த நோக்கத்திற்காக உருவாக்கினாரோ அந்த நோக்கங்களுக்கு இனியாவது பயன்பட வேண்டும். அப்படிப் பயன்படாவிட்டால் அது அரசுக்குப் போனால்தான் என்ன தவறு என்பதையும், அரசுக்குப் போவதற்கு பல நியாயங்கள் இருக் கின்றன என்பதை யும் சுட்டிக் காட்டவே இதைச் சொல்கிறோம். பூனைக்குட்டிகள் வெளியேறி விட்டன; பெருச் சாளிகளைப் போல விழி பிதுங்கி நிற்க வேண்டாம்.**

**“பெருச்சாளிகள் ஜாக்கிரதை”**
**நூல் கிடைக்குமிடம்: திராவிடர் மய்யம்,**
**120, காமராசர் புரம், வண்டிவாய்க்கால்,**
**அ.கலையம்புத்தூர் அஞ்சல், பழனி – 624 615.**
**நன்கொடை: ரூ.3**

## பெரியார் இயக்கத்தின் உறுதியான கொள்கை வீரர்: நாகை எஸ்.எஸ். பாட்சா முடிவெய்தினார்!



முதுபெரும் பெரியார் தொண்டர் நாகை எஸ்.எஸ். பாட்சா, தமது 82 ஆம் வயதில் 17.8.2010 அன்று காலை 6.30 மணியளவில் நாகையிலுள்ள வெங்கடேசுவரா மருத்துவமனையில் முடிவெய்தினார். பெரியார் வாழ்ந்த காலத்தில், பெரியார் இயக்கத்தின் கோட்டையாக விளங்கிய நாகை திராவிட விவசாய தொழிலாளர் சங்கத்தை, முழுப் பெறுப்பேற்று வழி நடத்தியவர். பெரியாரியல் சிந்தனையாளராகவும், பெரியார் காலத்தில் சிறந்த பேச்சாளராகவும், களப்பணியாளராகவும் செயல்பட்டவர் தோழர் பாட்சா. தந்தை பெரியார் நடத்திய 3 மாத பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயிற்சிப் பெற்றார். சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் 9 மாத சிறைத் தண்டனை பெற்றவர். அவருக்கு ரூசோ, சாக்ரடிஸ், யூரி ஜாகரின் என்ற மூன்று மகன்களும், வாலண்டினா என்ற மகளும் உள்ளனர். அனைவரும் திருமணம் ஆனவர்கள்.

பிறப்பால் முஸ்லீமாக இருந்தாலும், பெரியாரின் கொள்கைகளை ஏற்று ஒரு நாத்திகராகவே வாழ்ந்தார். இஸ்லாம் மார்க்கத்துக்கு அழைத்தவர்களிடம், பிற மார்க்கங்களில் தலையிடுவதை நபிகளே கூடாது என்று கூறும்போது நீங்கள், என்னை கட்டாயப்படுத்தக் கூடாது. என்னுடைய மார்க்கம் பெரியார் மார்க்கம் என்று ஆணித்தரமாக பதிலளித்து வந்தார். 2007 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி, பெரியார் திராவிடர் கழகம் தஞ்சையில் நடத்திய சாதி ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றுப் பேசினார். (அவரது உரை அடுத்த இதழில் வெளிவரும்) முடிவெய்திய செய்தி அறிந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயாளர் விடுதலை இராசேந்திரன், தாமரைக் கண்ணன், இராவணன் மற்றும் கழகத்தினரோடு அவரது நாகை இல்லம் சென்று கடந்த 22 ஆம் தேதி குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.

பெரியாருக்குப் பிறகு கி.வீரமணியின் செயல்பாடுகளில் அதிருப்தியடைந்த தோழர் எஸ்.எஸ். பாட்சா, கி.வீரமணி தலைமையிலிருந்து வெளியேறி, மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு தலைமையில் இணைந்து செயல்பட்டு வந்தார். பெரியார் கொள்கைப் படையின் தளபதியாக செயல்பட்ட ஒரு கொள்கை வீரரின் மறைவுக்கு பெரியார் திராவிடர் கழகம், வீர வணக்கத்தை உரித்தாக்குகிறது. (ஆர்)

REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# வேலூர் சிறையிலிருந்து விடுதலையான தோழர்களுக்கு உற்சாக வரவேற்பு

இந்திய அரசே, காசுமீர் மக்கள் மீதான போரை நிறுத்து; இராணுவத்தைத் திரும்பப் பெறு என்ற கோரிக்கையை முன் வைத்து உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் 13.8.2010 அன்று சென்னை சைதை பனகல் மாளிகை அருகே நடத்த இருந்த ஆர்ப்பாட்டத்துக்கு காவல்துறை தடை விதித்தது. தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த வந்த ஆர்ப்பாட்டத் தலைவர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தங்க தமிழ் வேலன் (மக்கள் விடுதலை), ரஜினிகாந்த் (சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி), கேசவன் (சி.பி.இ.எல்.), அகராதி (பெண்கள் எழுச்சி இயக்கம்), மனுவேல் (பொ.மா.எ.இ.) மற்றும் பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்த தோழர்கள் உமாபதி, தபசி குமரன், சுகுமாறன், வேலு, கோபி, செல்வகுமார், இளைய சிம்மன், மனோகர், ஜா. உமாபதி, குமரேசன், கணேசன், சுதாகர், சரவணன், தினேஷ், ஜான், விஜி, டேவிட் பெரியார், பரஞ்சோதி, பாண்டியன், தோழியர்கள் தமிழ், அம்பிகா ஆகியோர் கைதானார்கள்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தோழர்கள் 18 ஆம் தேதி காலை 7 மணியளவில் பிணையில் விடுதலையானார்கள். ஆகஸ்ட் 15 ஆம் தேதி சிறையில் கருப்புக் கொடி ஏற்றி, நாள் முழுதும் சுதந்திர நாள் கண்டனக் கருத்தரங்கை தோழர்கள் நடத்தினர். 18 ஆம் தேதி பகல் 1 மணியளவில் கழக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பேருந்தில் தோழர்கள் அனைவரும் வேலூரிலிருந்து அழைத்து வரப்பட்டு, இராயப்பேட்டை கழக அலுவலகம் வந்தபோது உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. கழக சார்பில் தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. தோழர்கள் கைது செய்யப்பட்டவுடன், அனைவருக்கும் தேவையான பொருள்களை வழங்குவதும், உணவு ஏற்பாடுகளை செய்தும், வேலூரிலிருந்து பேருந்தில் அழைத்து வரும் ஏற்பாடுகளையும், கழகப் பொருளாளர் அண்ணாமலை தோழர்களுடன் முன்னின்று செய்தார்.

நெமிலி திலிபன் மற்றும் வேலூர் மாவட்டக் கழகத் தோழர்கள் சிறையில், கழகத் தலைவர் உள்ளிட்ட தோழர்களை சந்தித்து தேவையான உதவிகளை செய்து வந்தனர். சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் கேசவன், அன்பு தனசேகர், குகா மற்றும் தோழர்கள், தோழர்களை பிணையில் எடுப்பதற்கான பணிகளில் செயல்பட்டனர். சைதை பெருநகர நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வாசு தோழர்களை பிணையில் எடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**– நமது செய்தியாளர்**

# பெரியாரின் நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடும் கனடா நாட்டு அறிஞர்




21.7.2010 கோவை படிப்பகத்தில் மாலை 6 மணிக்கு கழகத்தின் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் கனடா நாட்டின் தொல் பொருள் ஆராய்ச்சி யாளர் டாம்மெக்கலே கலந்து கொண்ட பெரி யாரியல் பயிலரங்கம் மற்றும் கலந்துரை யாடல் நிகழ்ச்சி நடை பெற்றது.

டாம் மெக்கலே தமிழ்நாட்டைச் சார்ந்த நைவால் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு புத்தகத்தைப் படித்தார். அதில் தந்தை பெரியார் பற்றியும், அவரின் நாத்திகக் கருத்துகளும் இடம் பெற்றிருந்ததையும் படித்த அவர், பெரியாரினால் ஈர்க்கப்பட்டார். ஆராய்ச்சிக்காக இந்தியா வந்த அவர் மருத்துவர் எழிலன் தொடர்பால் பெரியாரைப் பற்றி மேலும் பல செய்திகளை அறிந்து வியந்து போனார். இதனையடுத்து, தமிழ்நாடு வந்த டாம் மெக்கலே, மருத்துவர் எழிலன், பெரம்பலூர் இலட்சுமணன் ஆகியோர் உதவியுடன் ஈரோட்டிலுள்ள பெரியார் வீடு, நினைவிடம் போன்றவற்றை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் சட்ட எரிப்புப் போராட்ட பெரியார் தொண்டர்களை சந்தித்துப் பேசி பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டார். பின்னர் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் இயங்கும் கலப்புத் திருணமம் புரிந்தோர் சங்கம் (சாதி ஒழிப்புத் திருமணம்), பெரியார் குருதி கொடை இயக்கம் ஆகியவற்றை அறிந்து, பெரியார் தொண்டர்களை சந்திக்க வேண்டும் என்று ஆவலோடு கோவை படிப்பகத்திற்கு வந்து அனைவரையும் சந்தித்தார்.

டாம் மெக்கலே வருகையொட்டி அவர் தோழர்களை சந்திக்கும் வகையில் குறுகிய நேரத்திலேயே ஒரு பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறுஞ் செய்தி மூலம் நிறைய செய்திகள் அனுப்பப்பட்டு, நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் நிலவும் சாதி வேறுபாடுகள் தீண்டாமை போன்றவை கண்டிக்கப்பட வேண்டியவை. பெரியாரின் கொள்கையில் இருக்கும் உங்களை சந்தித்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். நான் பெரியாரின் புத்தகங்களை வாங்கி, எங்கள் நாட்டின் நூலகங்களிலும் பொது மக்கள் படிக்கவும், கனடா மொழியில் மொழி பெயர்த்து வெளியிடவும் இருக்கிறேன். இளைஞர்களாகிய நீங்கள் பெரியாரின் பாதையில் தொடர்ந்து செயல்படுங்கள்; போராடுங்கள்; உங்களை போன்றவர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி என்றார்.

டாம்மெக்கலே உரைக்குப் பின் கேள்வி பதில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோழர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். பயிலரங்கில் டாம்மெக்கலே உரையும் கேள்வி பதில்களையும் தோழர் பிச்சுமணி மொழி பெயர்த்தார். முடிவில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் தலைவர் ந.பன்னீர்செல்வம் நன்றி தெரிவித்தார்.

**செய்தி: கோவை நாகராசன்**

# ஈரோட்டில் 'குடிஅரசு' அறிமுகம்: முதுபெரும் பெரியார் தொண்டர் ஈரோடு சுப்பையா கழகத்துக்கு பாராட்டு


ஈரோடு சுப்பையா கழக வெளியீடுகளை பெற்றுக் கொள்கிறார்

ஈரோட்டில் 9.8.2010 திங்கள் கிழமை மாலை 6 மணிக்கு சூரம்பட்டி நால்ரோட்டில் 'குடி அரசு' நூல் அறிமுக விழா பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் இரத்தினசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். குமரகுருபரன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் விநாயகமூர்த்தி, பெரியார் பெருந் தொண்டர் சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

பெரியார் பெருந்தொண்டர் ஈரோடு சுப்பையா பேசுகின்றபோது, "பெரியார் திராவிடர் கழகத்தினர் 'தோழர்' என்று ஒருவரையொருவர் விளித்துக் கொள்வதை பெருமையாகக் கூறினார்கள். அய்யா பெரியார் அவர்கள்தோழர்கள் என்றுதான் அழைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதுபோலவே நீங்கள் இங்கே நடந்து கொள்வதும், அய்யாவின் கொள்கைகளை எடுத்துச் செல்வதிலும், மிகுந்த போர்க் குணத்துடன் கொள்கைகளுக்காக மட்டுமே அமைப்பு நடத்துவதைப் பார்க்கும்போது நான் மிகுந்த பெருமைப்படுகின்றேன். அய்யா அவர்களுக்கு பின்பு எங்கே இந்தக் கொள்கை? எப்படி நடக்குமோ! பரவுமோ! என எண்ணினேன். ஆனால், உங்களைப் பார்த்த பின்பு தான், நீங்கள் அமைப்பு துவங்கி நடத்துகின்ற முறையைப் பார்க்கின்ற போது உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்த கொள்கைகளை அய்யாவிற்குப் பின்பு எடுத்துச் செல்வதற்கு ஒரு அற்புதமான இயக்கம் - கொள்கைகளுக்காக எந்தத் தியாகமும் செய்வதற்கு தயாரான இளைஞர்களாக நீங்கள் இருக்கின்றதைப் பார்க்கும்போது நான் மன நிம்மதி அடைகின்றேன்" என்று மேடையில் அமர்ந்திருந்த கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர்கள் மூவரையும் பார்த்துக் கொண்டு குறிப்பிட்டுச் சென்னார். அய்யா அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் நமது கழக வெளியீடுகளை கழகத் தலைவர் பொதுச் செயலாளர்கள் மிகுந்த கரவொலிகளுக்கிடையே ஈரோடு சுப்பையா அவர்களுக்கு வழங்கினர். தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினர்.

நிகழ்ச்சியின்போது, பவானியைச் சார்ந்த துளசி, பாட்டாளி படிப்பகப் பொறுப்பாளர், குமாரப்பாளையம் சாமிநாதன், காளிங்கராயன்பாளையம் நல்லசிவம், விடுதலை சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் விநாயகமூர்த்தி, கிரேசி மெட்ரிக்குலேசன் பள்ளிப் பொறுப்பாளர் ஆகியோர் 'குடிஅரசு' நூல்களை மேடையில் பெற்றுக் கொண்டனர். அத்துடன் கழகத்தின் சார்பில் வழக்கறிஞர் ப.பா. மோகனை சிறப்பிக்கும் வகையில் அவருக்கும் 'குடிஅரசு' நூல் தொகுப்பு வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

ஈரோட்டில் அய்யா பெரியார் "குடிஅரசு" ஏட்டை நடத்தும்போது அந்த அச்சகத்தில் வேலை பார்த்து கடைசி வரையில் அவருடன் இருந்த பெரியவர் பெட்டிக்கடை ரங்கசாமி அவர்களை ஈரோடு இரத்தினசாமி, நாத்திகசோதி, சிவா, அர்ச்சுனன் ஆகியோர் நேரில் சந்தித்து அவரைப் பாராட்டி சிறப்பு செய்து வந்தனர்.

பொதுக் கூட்ட மேடையில் புதிதாக 5 தோழர்கள், கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கராத்தே சண்முகம் முயற்சியால் அந்தத் தோழர்கள் இயக்கத்திற்கு வந்து சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவா நன்றி கூறினார். பொதுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற ஈரோடு இரத்தினசாமி, நாத்திக சோதி, அர்ச்சுனன், சிவா ஆகியோர் மிகவும் கடுமையாக உழைத்தனர்.

**செய்தி : இராம. இளங்கோவன்**

## எழுத வேண்டிய சுவரெழுத்து வாசகங்கள்




மேலே இடம் பெற்றுள்ள வாசகங்களையே - தமிழகம் முழுதும் சுவரெழுத்தாக எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th August 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.